CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS

கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1 | பிப்ரவரி, 1956 | படி—5

வெற்றி நிச்சயம்!

"....இராமாயணத்தில் கூறப்படும் ஒரு செய்தி, என் நினைவுக்கு வருகிறது. சமுத்திரத்தைத் தாண்ட நினைத்தபோது, அநுமார் உள்பட எல்லோரும் முதலில் மலைத்து நின்றார்கள்.... அவருக்குள்ள ஆற்றல் அப்போது அவருக்குத் தெரியவில்லை. அதை மற்றவர்கள் எடுத்துக்கூறியதும், தன்னம்பிக்கை முகிழ்த்தது; சுயமுயற்சி மலர்ந்தது; பேராற்றல் உருவெடுத்தது. மலைப்பூட்டிய மாபெருங் கடல், எளிதில் தாண்டப்பட்டுவிட்டது.

மக்கள் சக்தியின் மகிமையை—பொது ஜனங்களின் பொதுநல ஆர்வத்தை—சிறந்த முறையில் எடுத்துரைத்து, தக்கவாறு பயன்படுத்தினால், கிராமங்களின் சுபிட்சத்துக்காக உருவாக்கப்படுகின்ற சமுதாயநலத் திட்டங்கள், வெகு எளிதில், பரிபூரணமாக நிறைவேற்றப்படும் என்பதில், சந்தேகமே இல்லை."

—எம். பக்தவத்சலம்

நிலச் சீர்திருத்தம்



[நிலச் சீர்திருத்தம் என்பது நம் நாட்டின் சிக்கலான பல முக்கிய பிரச்னைகளில் முதலாவதென்று கூறலாம். இது விஷயமாக ஒன்றுக்கொன்று நேர்மாறான கருத்துக்கள் நிலவி வருகின்றன. அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் இத்துறையில் செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள், இக்கட்டுரையில் தொகுத்துக் கூறப்படுகின்றன. எல்லா சாராரும் ஆழ்ந்து உணரவேண்டிய செய்திகள் இதில் அடங்கியுள்ளன. இப்போதுள்ள நிர்வாக அமைப்பையொட்டி, படிப் படியே முன்னேற்றம் காண அரசாங்கம் முயல்வதை இதன் மூலம் அறியலாம். கட்டுரையின் இறுதியில் காணப்படும் அறிவுரை ஆணித்தரமாய் அமைந் துள்ளது.

—ஆசிரியர்]

[ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு,
ரெவினியு அமைச்சர்.]

நம் நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நிலச் சீர்திருத்தம் பற்றிய பிரச்னை, நமது அரசினர் கவனத்திலிருந்து வருகிறது. அரசினருக்கும் விவசாயிகளுக்குமிடையேயுள்ள நேரடித் தொடர்பை பாதித்து, விவசாயிகளைப் பலவிதமாகக் கொடுமைப்படுத்திய ஜமீன்தாரி முறையை நீக்கியதே, இப் பிரச்னை சம்பந்தமாக, அரசினர் எடுத்த முதல் நடவடிக்கை யாகும். எனினும், ஜமீன்தாரி முறைக்குப் பதிலாக வேறு வித ஏற்பாட்டைச் செய்வது, எல்லா எஸ்டேட்களுக்குரிய ரயத்துவாரி செட்டில்மெண்ட் செய்வது முதலியவை சம்பந்தமாக சட்டமியற்ற கொஞ்சகாலம் பிடிக்கும். அது வரை எஸ்டேட்டுகளில் உள்ள விவசாயிகளுக்கு உடனடி யாக ஓரளவு நிவாரணம் அளிக்கவேண்டுவது அவசியமான தால், ரயத்துவாரி பிரதேசங்களில் விதிக்கப்படும் நிலவரி மதிப்பீடு அளவுக்குத் தகுந்தாற்போல் நிலச்சுவான்தார் களுக்குக் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையைக் குறைப்பதற்காக, 1947-ல் சட்டமொன்று இயற்றப்பட்டது. இச் சட்டத்தின் மூலம், 1955-ம் ஞு நவம்பர் மீ வரை சுமார் 10,000 கிராமங்களுக்குப் பயன் கிட்டியது.

இச் சட்டத்தைவிட முக்கியமானது 1948-ல் பிறப்பிக்கப் பட்ட சென்னை எஸ்டேட்டுகளைக் குறித்த சட்டமாகும். மேல் வாரமும் குடிவாரமும் உள்ள இனம் கிராமங்களைத் தவிர மற்ற எல்லா கிராமங்களையும், தகுந்த நஷ்ட ஈடு கொடுத்து, ஆர்ஜிதம் செய்து கொள்ள அரசினருக்கு இச்சட்டம் அதிகார மளிக்கிறது. ரயத்வாரி கொள்கைகளின்படி சர்வேசெய்து செட்டில்மெண்ட் செய்யப்பட்ட பிறகு, எஸ்டேட் விவசாயி களுக்கு ரயத்வாரி பட்டாக்கள் வழங்குவதற்கும், இச்சட்டத் தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இச் சட்டத்தின் கீழ், 10,500 சதுர மைல் பரப்புள்ள 2,674 எஸ்டேட்டுகளை ஆர்ஜிதப்படுத்தலாம். 1955-ம் ஞு அக்டோபர் மீ இறுதிக்குள் இந்த எஸ்டேட்டுகளில் 37 சதுர மைல் பரப்புள்ள 71 எஸ்டேட்டுகள் தவிர்த்து மற்றவை யாவும் அரசினரால் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டன. ஜமீன்தாரி நீக்கம் குறித்த சட்டத்தின் கீழ் வரும் 68 எஸ்டேட்டுகளுக்கு மட்டும்தான் அவை அரசினரால் எடுத்துக் கொள்ளப்படும் என்ற நோட்டீசு அனுப்பவில்லை.

ஏற்கெனவே அரசினரால் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளில் 7,521 சதுரமைல் அளவுக்கு சர்வே நடத் தப்பட்டு, எட்டு எஸ்டேட்டுகளில் ரயத்துவாரி செட்டில் மெண்ட் முறை அமுல் ஆகிவிட்டது. இச் சீர்திருத்தத்தின் மூலம் நிலப்பிரபுத்துவத்தின் கடைசி அடிச்சுவடுகளும் அழிக்கப்பட்டுவிட்டனவென்று கூறலாம். நம் ராஜ்யத் தில் ஆறிலொரு பங்கு விஸ்தீர்ணமுள்ள முன்னைய எஸ்டேட் பிராந்தியங்களில் உள்ள மக்கள் மனதில் தன்னம் பிக்கையும் திருப்தியும் தோன்றியுள்ளன.

நியாய வார நிர்ணயம், குத்தகை கால நிர்ணயம் முதலியவற்றிற்காக, 1930-ம் வருஷ வாக்கிலிருந்து மலபார் ஜில்லாவிலே, ஒரு சட்டம் அமுலில் இருந்துவந்தது. நியாய வார நிர்ணயத்துக்காக சிவில் கோர்ட்டுகளில் மனு செய்துகொள்ள வேண்டியிருந்தது. 1951-ம் ஆண்டிலும் 1954-ம் ஆண்டிலும் இச் சட்டம் திருத்தப்பட்டது. இத் திருத்தங்கள் மூலம், குத்தகைத் தொகையைக் குறைப்ப தற்கு குத்தகைக் கோர்ட்டுகள் மூலம் மனுக்களைப் பைசல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இச் சட்டத்திருத்தத் தின் மூலம் அமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பு மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. குத்தகைத் தொகையைக் குறைக்கக்கோரி அநேக மனுக்கள் குத்தகைக் கோர்ட்டு களில் தாக்கல் செய்யப்பட்டன. ஆகவே, அரசினர் பதினெட்டு குத்தகை கோர்ட்டுகளை தென் கன்னட ஜில்லா விலுள்ள முப்பத்திமூன்று கிராமங்களிலும், மலபார் ஜில்லாவிலும் அமைத்தனர். இக்கோர்ட்டுகள் 1955-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இறுதி வரை சுமார் 34,000 மனுக்களைப்பெற்று, 18,000-த்துக்கும் மேற்பட்ட மனுக்களை பைசல் செய்தன.

தஞ்சாவூர் சட்டம்

சென்னை ராஜ்யத்தின் தானியக் களஞ்சியம் என்று கூறப்படும் தஞ்சாவூர் ஜில்லாவில்தான், மேற்குக் கடற்கரையிலுள்ள ஜில்லாக்களைத் தவிர்த்து மற்றெந்த ஜில்லாக்களைக்காட்டிலும் அதிகப்படியாக நிலங்கள் குத்தகைக்கு விடப்படுகின்றன. ஆகவே, மற்ற ஜில்லாக்களில் குத்தகை சம்பந்தமாக சட்டமியற்றி அமுல் செய்வதற்குமுன் தஞ்சாவூரில் அச் சீர்திருத்தத்தைச் செய்வதென்று, 1952-ல் அரசினர் முடிவு செய்தனர். அந்த ஜில்லாவில் சில மிராசுதாரர்களுக்கும் குத்தகைதாரர்களுக்குமிடையே இருந்த உறவும் சில மிராசுதாரர்களுக்கும் அவர்களுடைய பண்ணையாட்களுக்குமிடையே இருந்த உறவும் அப்போது சீராக இல்லை. 1952-ல் தஞ்சாவூர் குத்தகைதாரர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டு, பிறகு, அது தென் ஆற்காடு ஜில்லாவிலும் அமுல் செய்யப்பட்டது. சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களுக்கு ஐந்து வருட காலத்துக்கு குத்தகை சம்பந்தமாக இச் சட்டம் பாதுகாப்பு அளிப்பதுடன் அவர்கள் கொடுக்க வேண்டிய அதிக பட்ச குத்தகையையும் நிர்ணயிக்கிறது. சாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள், மிராசுதாரர்கள், பண்ணையாட்கள் இவர்களிடையே எழும் தகராறுகளைத் தீர்த்து வைக்கவும், இச்சட்டம், நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்கியிருக்கிறது. இம்மாதிரியான தகராறுகளின் காரணமாக விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுவிடும் என்ற நிலைமை ஏற்பட்டிருந்தபோது, தகுந்த சந்தர்ப்பத்திலே இந்தச் சட்டம் தகராறுகள் ஏற்பட்டிருந்த இடங்களில் அமுல் செய்யப்பட்டதன் விளைவாக அங்கெல்லாம் அமைதி ஏற்பட்டது. இச் சட்டத்தின் கீழ் 1955-ம் ஆண்டு ஜூன் மீ இறுதிவரை சுமார் 26,000 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, அவைகளில் சுமார் 23,500 மனுக்கள் பேரில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

அரசினர்செய்த சீர்திருத்தங்களில் முக்கியமானவை சிலவற்றைப்பற்றிச் சுருக்கமாக நான் இங்கு எடுத்துக்கூறியிருக்கிறேன். இவை நம் நாடு சுதந்திரம் பெற்றபின்பு அமுல் செய்யப்பட்டவை. இவைகளில் பெரும்பாலானவை முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அமுல் செய்யப்பட்டன. எனினும் க்ஷேமநல அரசாங்கம் உருவாவதற்கு மேலும் அநேக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதை அரசினர் நன்கு உணர்ந்துள்ளனர். விரிவாகவும் பூரணமாகவும் அமுல் செய்வதற்குகந்த நிலச் சீர்திருத்தங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், எவ்வித சீர்திருத்தத்தையும் செய்வதற்குமுன் அமைதியான சமூகச் சூழ்நிலை நாட்டில் நிலவுவது அவசியம். இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே, அரசினர் சட்டமியற்றி சாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதைத் தடுக்க ஏற்பாடு செய்தனர். 1954-ம் வருடத்திய தென் கன்னட (சாகுபடி செய்யும்) குத்தகைதாரர்கள் பாதுகாப்பு சட்டமும் 1955-ம் வருடத்திய சென்னை (சாகுபடி செய்யும்) குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டமும் இனிமேல் இயற்றப்படவிருக்கும் சிறந்த நிலச்சீர்திருத்த சட்டங்களுக்கு முன்னணியாக விளங்குகின்றன. எனினும் ஒன்றை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நலம். அதாவது, நிலச்சீர்திருத்தம் என்பது வறுமையால்வாடும் கிராமப் பிரதேசத்தை சொர்க்க பூமியாக மாற்றிவிடக்கூடிய மந்திரக்கோல் அல்ல. ஏனெனில் கடின உழைப்பால் மட்டுமே அத்தகைய அற்புத மாறுதல் உண்டாகும். ரத்தம் சிந்தவேண்டியதில்லை. கண்ணீர் உகுக்கவேண்டியதில்லை. ஆனால் நெற்றி வியர்வை நிலத்தில்விழ பாடுபட வேண்டியது அவசியமாகும். அதிர்ஷ்டவசமாய் கடினமாக உழைப்பதற்கு மக்கள் தாங்களாகவே முன் வருவதால் கூடிய சீக்கிரம் நமது கனவு நனவாகி நம் நாடு செழித்தோங்கி எங்கும் மக்கள் ஆனந்தத்துடன் நல் வாழ்வு நடத்துவார்கள் என்பதை நாம் அனைவரும் எதிர்பார்ப்போமாக.

சுந்தரபாண்டியம் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் ஆரம்பவிழா

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் உள்ள சுந்தரபாண்டியம் கிராமத்தில் பஞ்சாயத்து 1, 2-ல் உள்ள நெசவாளர்களுக்காக சுந்தர கணேஷ் நெசவாளர் கூட்டுறவு சங்கமும், வார்டு 3, 4, 5-ல் உள்ள நெசவாளர்களுக்காக காந்தி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கமும் 1955-ம் ஆண்டு டிசம்பர் மீ 9உ-ல் இராமநாதபுரம் வட்டார நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சப்-ரிஜிஸ்திரார் ஸ்ரீ S. லூர்துசாமி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அவ்வமயம் ஸ்ரீவில்லிபுத்தூர் சமுதாயநலத்திட்ட கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி ஸ்ரீ S. கோபாலகிருஷ்ணனும் கூட்டுறவு சீனியர் இன்ஸ்பெக்டர்கள், ஸ்ரீ T. சுந்தரராஜன், ஸ்ரீ பிரமநாயகம் ஆகியோர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கடமை பற்றிப் பேசினர். தற்பொழுது ஸ்ரீவில்லிபுத்தூர் சமுதாய நலத்திட்டத்தின் கீழ் உள்ள கிராமங்களில் வசிக்கும் எல்லா நெசவாளர்களும் கூட்டுறவு சங்கங்களின்கீழ் அங்கத்தினர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காவேரிப்பட்டினம் வட்டாரத்தில்

பாரூரில், நடுத்தர பள்ளி கட்டுவதற்காக, 15,000 ரூபாய் மதிப்புள்ள 5 ஏக்கர் நிலம் நன்கொடையாகக் கிடைத்தது. இரு பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மொத்தம் 2 மைல் 1 பர்லாங்கு நீளமுள்ள 4 ரஸ்தாக்கள் போடப்பட்டன.

FEB 1958

வெறும் சங்கமா? வெள்ளிச் சுரங்கமா?

[ஸ்ரீ ஜி. வெங்கடாசலபதி, அபிவிருத்தி கூட்டுக் கமிஷனர்—Joint Development Commissioner.]

கிராம நல வேலைகளுக்காக, நாடெங்கும் பல அமைப்புகள் தோன்றுவதைக் கண்டு, நாம் மகிழ்ச்சியடையலாம். கிராம சேவா சங்கங்கள், கிராம அபிவிருத்தி மன்றங்கள் கதர் அபிவிருத்தி நிலையங்கள், மாதர் நல ஸ்தாபனங்கள், இளைஞர் கழகங்கள், ரேடியோ சங்கங்கள் முதலிய பல ஸ்தாபனங்கள் கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டு, நடந்து வருகின்றன. கூட்டுறவு முயற்சியில் ஆழ்ந்த நம்பிக்கை ஏற்படுத்த இவை மிகவும் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இவை எப்படி நடைபெறுகின்றன என்பதில் மேலும் அதிக அக்கறை செலுத்தவேண்டியது நாம் எல்லோருடைய கடமையாகும்.

ஒரு ஸ்தாபனத்தை ஒழுங்காக நடத்துவதென்பது சுலபமான காரியமல்ல. சாதாரணமாக, ஆரம்பகாலத்தில் இருக்கும் உற்சாகமும், உழைப்புத்திறனும் தொடர்ந்து இருப்பதில்லை. அங்கத்தினர்களிடையேயும், நிர்வாகிகளிடையேயும் அடிக்கடி சோர்வு ஏற்படுவது இயற்கை. பல திறப்பட்ட மக்களை ஒன்று திரட்டுவது பொதுநல விஷயங்களைக்குறித்து நிதானமாக விவாதித்து நல்ல முடிவுக்கு வருவது, எல்லோரும் சேர்ந்து தீர்மானித்த காரியத்தை நிறைவேற்றுவதில் சிரத்தைகாட்டுவது முதலிய ஆக்கப் பணிகளில் பெரும்பாலான அங்கத்தினர்கள் ஈடுபட்டால் தான், உருப்படியான வேலைகள் நடைபெறும். இல்லையானால், இந்த ஸ்தாபனங்கள் பெயரளவில், வெறும் சங்கங்களாகவே இருக்கும்.

வேலைசெய்யும் விதம்

சில சங்கங்கள் குறிப்பிட்ட சிலருடைய வசதிற்கேற்ப தொழில்படும். உதாரணமாக, சங்கத்தின் நிர்வாகிகளுக்கு ஓய்வும் விருப்பமும் ஏற்பட்டால், வேலைகள் மும்மரமாக நடைபெறும். மற்ற சமயங்களில் செயலற்றுக் கிடக்கும். இந்த முறையால், பொது மக்களின் ஏகோபித்த நம்பிக்கையைப் பெறமுடியாது. ஏதோ வேடிக்கைக்குரிய விஷயமாகக் கருதப்படுமேயன்றி, நிரந்தரப் பலன் அளிக்கும் சாதனமாக அமையாது.

ஆகவே, கிராமங்களில் நடைபெறும் எந்த ஸ்தாபனமும் நிரந்தரமாகவும், தொடர்ச்சியாகவும் தொண்டாற்ற வேண்டுமானால், ஒரு முக்கிய லட்சியத்தை மறக்கக்கூடாது. பாமர மக்களின் வாழ்க்கைக்கு ஓரளவாவது பயன்படும் ஒரு தொழிலை வளர்ப்பதில் ஊக்கம் காட்டவேண்டும். இதைத்தான் மகாத்மா காந்தியடிகள் மிகவும் வற்புறுத்தி வந்தார். நம் கிராமச் சீர்கேடுகளுக்கான மூலகாரணத்தை ஆராய்ந்து அதற்கேற்ற அருமருந்தை நமக்கு அளித்துச் சென்றிருக்கிறார். அதை உணராமல், மேற்போக்கான பிரச்னைகளுக்கு நிவாரணம் காண்பதில்மட்டும் நாம் நின்றுவிடக்கூடாது.

உதாரணமாக, ஒரு கிராமத்துக்கு வேண்டிய பல பொது வேலைகள் செய்வதற்காக ஒரு சங்கம் ஏற்படலாம். முதலாவதாக, ரஸ்தாபோடும் வேலையில் ஈடுபட்டு, அதை நிறைவேற்றலாம். பிறகு பள்ளிக்கூடம், வாசகசாலை, நூல் நிலையம், ரேடியோ, பூங்கா, குழந்தைகளுக்கான விளையாட்டுக் கருவிகள் முதலியவற்றில் கருத்து செலுத்தலாம். ஆனால், இவற்றுடன்மட்டும் நின்றுவிட்டால், கிராம நல ஸ்தாபனம் தன் முழு கடமையையும் செய்ததாக நான் கருதமாட்டேன்.

நிரந்தர பலனளிக்கும் வழிவகைகள்

பாமர மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அவர்களின் உழைப்புத்திறனைத் தக்கவாறு பயன்படுத்தி அந்தக் குடும்பங்களின் நல் வாழ்வுக்கான வழி வகைகளை ஏற்படுத்தாதவரையில், கிராம அபிவிருத்தித் திட்டம் முழு வெற்றி அடையாது. வெகு சுலபமாக, கிராம மக்கள் மேற்கொள்ளக்கூடிய தொழில், நூல் நூற்பது. இதில் ஈடுபடும் எந்த ஏழைக்கும் ஏறக்குறைய ஓரளவு வருமானம் பெற வழியிருக்கிறது. நம் ராஜ்யத்தில் தீவிரக் கதர் அபிவிருத்தித் திட்டம் நடைபெறும் வட்டாரங்களில், இதை அனுபவபூர்வமாக கிராம மக்கள் அறிந்திருக்கிறார்கள். இத் தொழிலால் உற்பத்தியாகும் பொருளை விற்பனை செய்வதிலும் அதிக கஷ்டம் இல்லை. ஏனெனில், ஆடை எல்லோருக்கும் தேவையானது. எப்போதும் தேவையானது.

குறைந்த மூலதனத்தால் அதிகம் பெருக்கு வேலை

கிராமக் கைத்தொழில்களைப் பற்றிப் பேசுவதில் இப்போது பல நிபுணர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்கள் புதுப்புது யோசனைகள் சொல்கிறார்கள். ‘பாட்மின்டன்’ பந்தாட்டத்துக்குப் பயன்படும் மட்டைகளைச் செய்யலாம் என்கிறார் ஒருவர். குதிரைலாடம் செய்யலாம் என்கிறார் மற்றொருவர். இப்படி எத்தனையோ ஆலோசனைகள் கூறப்படுகின்றன. ஆனால், இவற்றுக்கெல்லாம் நம் நாட்டில் எவ்வளவு தேவையிருக்கிறது, இவற்றால் எத்தனை பேர் பிழைக்க வழி கிடைக்கும், இதற்காகும் மூலதனச் செலவு என்ன என்பதைப்பற்றி கொஞ்சம் ஆராய்ந்தால், நமக்கே சிரிப்பு வரும். கிராமங்களில் உள்ள மக்கள் அனைவரும்

மேற்சொன்ன தொழில்களை மேற்கொண்டால், அவற்றை எங்கே கொண்டு விற்பது ?

குறைந்த மூலதனத்தைக்கொண்டு, (அதாவது கை ராட்டினத்துக்கும் பஞ்சுக்கும் சேர்த்து ஐந்து ரூபாய் இருந்தால் போதும்) பலரும் பிழைக்கக்கூடிய கிராமக் கைத்தொழில்தான், கதர்த்தொழில். இது என்றும் வற்றாத கிணறு. நீர் இறைக்க இறைக்கச் சுரக்கும் பாங்குள்ள கிணறு. மக்களின் நாகரிக மேம்பாட்டுக்கும், பொருளாதார உயர்வுக்கும் வழிகோலும் சிறந்த சாதனம். சிறப்பாக, விவசாய வேலைகள் இல்லாத நேரங்களில் கிராம மக்கள் இத்தொழிலில் ஈடுபடலாம். வயற்காடுகளில் வேலை இல்லாதபோது, வீடுகளிலேயே இருந்து, இத்தொழிலை மேற்கொள்ளலாம். எனவே, கதர் அபிவிருத்தி வேலை கிராம மக்களுக்கு நிரந்தரபலன் அளிக்கும் எளிய தொழிலாக அமைகிறது.

வெள்ளிக் கம்பிகள்

ராட்டினத்திலிருந்து வரும் இழை ஒவ்வொன்றும் பாமர மக்களுக்கு வாழ்வளிக்கும் வெள்ளிக் கம்பி என்றே சொல்லலாம். ஆயிரக்கணக்கான குடிசைகளில் உற்பத்தியாகும் இந்த வெள்ளிக்கம்பிகள், நாட்டின் நலிவைப் போக்கி, செல்வத்தை வளர்க்கும் கருவிகளாகும். யந்திர பூதம் இச் செல்வத்தை அழிக்கமுடியாது. வேலை நிறுத்தப்பேய் இந்தச் செல்வ வளர்ச்சியைத்தடை செய்ய இயலாது. வெளிநாட்டு யந்திரங்களோ, பேராசைக்காரரான ஒரு சிலரின் மூலதனமோ இதற்குத் தேவையில்லை. அமைதியான முறையில், சட்டதிட்டங்கள் எதுவுமின்றி, சுலபமாக, நாட்டின் பல்வேறு கிராமங்களில், எப்போதும் நடைபெறக்கூடிய வேலை.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தங்கச் சுரங்கம், நிலக்கரிச் சுரங்கம் முதலியன பெரிதும் துணைசெய்கின்றன. ஆயினும், இவையெல்லாம் எடுக்க எடுக்க குறையக்கூடிய சுரங்கங்கள். என்னைக்கேட்டால், கதர்த்தொழில் என்பது, வற்றாத வெள்ளிச் சுரங்கம் என்பேன். இயற்கையன்னை அளிக்கும் பருத்தியிலிருந்து வெள்ளிக் கம்பிகளை நூற்கும் தொழிலில் எத்தனை பேர் வேண்டுமானாலும் ஈடுபடலாம். இந்தச் சுரங்கத்தில் வேலைசெய்வோருக்கு எப்போதும் ஆபத்தில்லை. ஆரோக்கியமும் பாதிக்காது. ஓரளவு ஊதியம் நிச்சயம் கிடைக்கும்.

வட்டாரத்துக்கு ஆயிரம் ராட்டைகள்

ஆகவே, கிராமங்களிலுள்ள எல்லா சங்கங்களும் கதர்த்தொழிலில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். சிறப்பாக, சமுதாய நலத்திட்டம் நடைபெறும் வட்டாரங்களில் குறைந்தது 1,000 ராட்டைகள் சுற்றவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கான உதவியும், பயிற்சியும் தர, விசேஷ சேவையாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் துணைகொண்டு, கதர்த்தொழிலை மேலும் தீவிரமாக்க எல்லோரையும் வேண்டுகிறேன். இவ்வாறு, செய்தால், வெறும் சங்கங்கள் நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் வெள்ளிச் சுரங்கங்களாக வழியேற்படும் என்பது உறுதி.

வத்திராயிருப்பு கிராமக் கூட்டுறவு பாங்கு திறப்புவிழா

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் உள்ள வத்திராயிருப்பையும் அதைச் சுற்றிச் சுமார் 5 மைல் வட்டாரத்திலுள்ள 10 கிராமங்களையும், விவகார எல்லையாகக்கொண்ட வத்திராயிருப்பு கிராம பாங்கின் ஆரம்ப விழா 1955-ம் ஆண்டு டிசம்பர்மீ 2உ அன்று மாலை 4 மணிக்கு இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ S. இராமசாமி நாயுடு, M.L.A., தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீவில்லிபுத்தூர் நகரசபைத் தலைவர் ஸ்ரீ சிவகாமிநாத பிள்ளை விளக்கு ஏற்றி பாங்கை ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீ R. கிருஷ்ணசாமி நாயுடு, M.L.A., கூட்டுறவுக் கொடியேற்றி வைத்துப் பேசினர்.

பாங்கு பிரசிடென்ட் ஸ்ரீ R. சுப்பிரமணிய அய்யர் யாவருக்கும் நல்வரவுகூறி வரவேற்றார்.

இராமநாதபுரம் வட்டார கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் ஸ்ரீ S. இராஜையா நாடார் டி பாங்கு ஆரம்பிக்க குறைந்த கால அளவில் சுமார் 850 மெம்பர்களுடன் ரூ. 37,000 பங்குத் தொகை வசூலித்த மக்களை மிகவும் பாராட்டினர்.

மேற்படி பாங்கு 5 வருஷத் தவணைக்கு ரூ. 2,000 வரை வில்லங்கமில்லாத சொத்துக்களின் பேரில் கடன் கொடுப்பதுடன் மற்றும் குறுகிய காலக்கடன், தானியங்கள், சர்க்கார் பிராமிஸரி நோட்டுகள், இன்ஷ்யூரன்ஸ் பாலிசிகள், தங்க நகைகள் இவைகளின் ஈட்டின்பேரிலும் கடன் கொடுக்கும். இது தவிர மெம்பர்களுக்கு சிக்கனப் பழக்கத்தையுண்டுபண்ணும் பொருட்டு இந்த பாங்கில் பிக்செட் டிபாசிட், சேவிங்ஸ் டிபாசிட், ஹோம் சேப்டி டிபாசிட், சிட் பண்டு டிபாசிட் ஆகியவைகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

இந்த பாங்கின் அலுவல்களை கவனித்து வருவதற்காக 9 நிர்வாகஸ்தர்களை மாகாண ரிஜிஸ்திரார் அவர்கள் முதல் 3 வருஷங்களுக்கு நியமனம் செய்துள்ளார்கள்.

ஆரம்ப விழாவின்போது டிபாசிட்டாக ரூ. 1,500 வரவு வந்தது மிகவும் சந்தோஷமாகக் கூடியதாக இருந்தது.

பாங்கை வாழ்த்தி சென்னை மாகாண கூட்டுறவு ரிஜிஸ்திராரிடமிருந்தும், இந்த பாங்கை ஆரம்பிக்க சகல முயற்சியும் எடுத்துக்கொண்ட டிப்டி ரிஜிஸ்திரார் ஸ்ரீ பி. அச்சுதன் நம்பியாரிடமிருந்தும் மற்றும் பலரிடமிருந்தும் ஆசிச் செய்திகள் வந்தன. விழாவிற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் சமுதாய அபிவிருத்தி அதிகாரி ஸ்ரீ T. L. ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்களும் மற்றும் பல பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர். பின்னர் பாங்கின் பொருளாளர் ஸ்ரீ கருப்பையாத் தேவர் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

G.N.—2

காட்சி 1

இடம்—காட்டுப்பட்டியில் ஹைவேஸ் ஜூனியர் இஞ்சினியர் ஆபீஸ்.

காலம்—ஆபீஸ் நேரம்.

நடிகர்கள்—மோகன், முனிசாமி, ராமு, சோமு.

[மோகன் பிளான் ஒன்று போட்டுக்கொண்டிருக்கிறார்—முனிசாமி வருகிறான்.]

முனிசாமி—ராமு, சோமுன்னு ரெண்டுபேரு வந்திருக்காங்க. உங்களைப்பார்த்து என்னமோ பேசனுமாம்.

மோகன்—சரி வரச்சொல்லு.

[முனிசாமி வெளியில் சென்று ராமு, சோமு இருவர்களையும் அழைத்துக் கொண்டு வருகிறான்.]

சோமு, ராமு—வணக்கம்! வணக்கம்!

மோகன்—வணக்கம், உட்காருங்கள் இப்படி.

[இருவரும் உட்காருகிறார்கள்.]

மோகன்—நீங்களெல்லாம் யார் என்பதை தெரிந்து கொள்ளலாமா?

ராமு—என் பெயர் ராமு. இவர் பெயர் சோமு. நாங்கள் மோகனத்தூர் வாசிகள்.

மோகன்—நல்லிடைக்குறிச்சிக்கு அருகாமையில் இருக்கிறதே அந்த மோகனத்தூர்தானே.

சோமு—ஆமாம், அந்த மோகனத்தூர்தான்.

மோகன்—என்ன விசேஷம்?

சோமு—எங்கள் மோகனத்தூருக்கு நல்ல சாலேயே......

ராமு—நல்ல சாலை என்ன, சாலையே கிடையாதுங்க.

மோகன்—வாஸ்தவந்தான்.

ராமு—மோகனத்தூரிலிருந்து நல்லிடைக்குறிச்சி வரையிலுமாவது ஒரு சாலை போட்டால்தான் எங்கள் கிராமம் முன்னேறுவதற்கு வழியுண்டு.

சோமு—இது விஷயமா நீங்க கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொண்டா காரியம் நிச்சயம் நடந்துவிடும்.

ராமு—இந்த காட்டுப்பட்டிக்கு நீங்க வந்து சில மாதந்தான் ஆகியிருக்கிறதென்றாலும் இந்த குறுகிய காலத்தில் நீங்கள் செய்திருக்கிற வேலைகளைப்பற்றி புகழாத ஜனங்களே கிடையாது.

மோகன்—அதிருக்கட்டும்.

ராமு—இது சம்பந்தமா மனு ஒன்று தயாரித்து கிராமத்து மக்களுடைய கையெழுத்தெல்லாம் வாங்கியிருக்கிறோம்.

மோகன்—சரிதான், ரொட்டின் வேலையை ஆரம்பிச்சாச்சு.

[ராமு மனுவை மோகன் கையில் கொடுக்கிறான். மோகன் அதை வாங்கி பார்க்கிறார். பிறகு........]

மோகன்—பொதுவாக மனுக்கள் தயாரிக்கும்போது மக்களுக்கு இருக்கிற ஆர்வம் தொடர்ந்து இருப்பதில்லை. நான் சொல்றேன்னு நீங்கள் வருத்தப்படக்கூடாது.

சோமு—நல்லாயிருக்கு. சும்மா சொல்லுங்க.

மோகன்—ஒரு காரியத்துக்கு மனு எழுதிக்கொடுத்துட்டா அதோட தங்களுடைய வேலை முடிஞ்சுப் போயிடுதுன்னு ஜனங்கள் எண்ணி விடுகிறார்கள். அதுகூடாது. எடுத்த காரியத்தை முடிக்கும் வரையில் எந்த கஷ்டம் வந்தாலும் தளராமல் இருக்கவேண்டும். அதிகாரிகளோடு ஒத்துழைக்கவேண்டும்.

ராமு—இந்த "புதிய பாதை" சம்பந்தமாக உங்களுக்கு என்னென்ன விதமான உதவிகள்வேண்டுமோ அவ்வளவையும் செய்ய நாங்கள் எந்த சமயத்திலும் தயாராக இருக்கின்றோம்.

மோகன்—இப்போ தேசிய விஸ்தரிப்புத் திட்டம், ஸ்தல முன்னேற்றத் திட்டம்னு பல வேலைகள் செய்து கொண்டிருக்கிறோமே அவைகளை நீங்கள் கவனிச்சிருக்கிறீங்களா ?

சோமு—ஆமாம், ஏதோ கேள்விப்பட்டிருக்கிறோம்.

மோகன்—நம்ப கீழத் தஞ்சைப் பகுதியிலே கிளியனூர், தலைநாயர், கரியாபட்டினம் முதலிய இடங்களிலே பல சாலைகள் அமைத்திருக்கிறோம்.

ராமு—அதே திட்டத்திலே இந்த சாலையையும் சேர்த்துடுங்க சார். அரசாங்கத்திலே பாதிப்பணம் தருகிறார்களாமே இதுமாதிரி வேலைகளுக்கு.

மோகன்—அரசாங்கத்திலே பாதி பணம் தாராங்களா ? யாரு சொன்னு ?

சோமு—அப்போ பாதிப் பணந்தருகிறாங்கன்னு நம்ப அபுபக்கர் ராவுத்தர் சொன்னாரே ! ராமு, அது வெறும் ரீப்புத்தானு ! ?

மோகன்—அப்படியில்லே. இப்போ ஒரு சாலைக்கு போடுவதற்கு—என் உங்க சாலையைத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன். அந்த வேலைக்கு உத்தேசமா 25,000 ரூபாய் ஆகுமுன்னு மதிப்பிடப்பட்டிருக்கிறோம். அரசாங்கத்திலே அதற்கு ரூ. 12,500 கொடுக்கமாட்டாங்க. ரூ. 10,000 தான் கொடுப்பாங்க.

ராமு—ஓகோ ! ஒவ்வொரு வேலைக்கும் அரசாங்கத்தார் ரூ. 10,000 தான் கொடுப்பாங்கபோலிருக்கிறது.

மோகன்—ஊகும் ! அப்படியுமில்லே ! இப்போ ஒரு வேலையினுடைய எஸ்டிமேட்டுத் தொகை 16,000 ரூபாய்ன்னு வச்சுக்கோங்க. அதற்கு அரசாங்கத்தார் ரூ. 10,000 கொடுக்கமாட்டாங்க.

சோமு—எவ்வளவுதான் கொடுப்பாங்க.

மோகன்—8,000 ரூபாய்தான் கொடுப்பாங்க.

ராமு—இப்போ நல்லா புரியுதுங்க. அதாவது ஒவ்வொரு வேலைக்கும் போடப்படுகிற எஸ்டிமேட்டுத் தொகையிலே பாதி அல்லது ரூ. 10,000 இந்த இரண்டில் எது குறைவாக இருக்கிறதோ அதை அரசாங்கம் கொடுத்துவிடுகிறது. மீதியை ஜனங்கள் போட்டுக்கொள்ள வேண்டும்.

மோகன்—ஆமாம் ! அதேதான்.

சோமு—உயர்ந்த அளவு ரூ. 10,000-ம்னு ஏன் வச்சிருக்காங்க ? இன்னும் அதிகமாக ஏன் வைக்கக்கூடாது ?

ராமு—ஆமாங்க, அதிகப்படுத்தினு பெரிய பெரிய வேலைகளைச் செய்யலாமே.

மோகன்—அதுதான் கிடையாது. இந்த 'திட்டங்கள் எதற்காக நடத்தப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா ?

சோமு—கிராமங்களெல்லாம் முன்னேற்ற மடையனும்ன்னு ஏற்படுத்தியிருக்காங்க.

மோகன்—கிராம முன்னேற்றம்ன்னு சொல்றது வாஸ்தவந்தான். சுயமுயற்சியால் ஒவ்வொரு கிராமமும் முன்னேறவேண்டுமென்பதுதான் இதில் முக்கியமான அம்சம்.

ராமு—நீங்க சொல்லுவது சரியான பாயிண்டுங்க (point).

மோகன்—குக்கிராமங்கள் முன்னேற கோடிக்கணக்கில் மதிப்புள்ள திட்டங்கள் வேண்டியதில்லை. அப்படி திட்டமிட்டால் அவைகளுக்கு ஆகும் செலவில் கிராமங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய பகுதியை லட்சக் கணக்கான ரூபாயை ஏழை மக்களால் வசூல் செய்துகொடுக்க முடியுமா ?

சோமு—கஷ்டந்தாங்க.

மோகன்—அவசியம் இருந்தால் முதலில் ரூ. 20,000 மதிப்பில் ஒரு சாலை அமைப்பது. பிறகு மற்றொரு திட்டம் போர்டு பள்ளிக்கூடம் கட்டுவது. இப்படியே ஆஸ்பத்திரி, குடிதண்ணீர், நீர்பாசனம், மின்சாரம், விவசாயம் ஒவ்வொரு துறையிலும் வசதிகள் செய்துக் கொள்ளலாம்.

ராமு—அப்படீன்னு பெரிய பெரிய திட்டங்களை விட்டுவிட வேண்டியதுதானு ?

மோகன்—பெரிய திட்டங்களைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவைகளை மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள் தாங்களே நேரில் கவனித்துக்கொள்ளுகின்றன. பவானி, துங்கபத்ரா, ஹிராகுட், பக்ரா நங்கல், ராமபாதசாகர் போன்ற பெரியபெரிய அணைத் திட்டங்களை அரசாங்கம் நடத்தவில்லையா ? புகளூரில் காவேரி ஆற்றிலும், கோயம்பத்தூருக்கருகில் நொய்யல் நதியிலும், திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ள கொடவனாற்றிலும், செங்கற்பட்டிற்கருகிலும், ராணிப்பேட்டையிலும், பாலாற்றிலும், முத்துப்பேட்டையில் கோரையாற்றிலும், அச்சுதமங்கலத் தருகில் திருமலைராஜன் ஆற்றிலும், மாயவரத்தருகில் பழவனாற்றிலும், பல பெரிய பாலங்கள் கட்டப்படவில்லையா ? மேலும் சீகாழிக் கருகில் கொள்ளிடத்தில் ஒரு பாலம் கட்டப்பட்டுவருகிறது. நாகப்பட்டினத்திற்கு அருகில் கடுவையாற்றில் ஒரு நூதனப்பாலம் கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் பொது மக்களிடமிருந்தா நன்கொடைகள் கேட்டார்கள் ?

சோமு—அதெல்லாம் சரிதாங்க. அதிருக்கட்டும் நம்ப மோகனத்தூருக்குச் சாலை போடக் ரூ. 25,000 ஆகுங்களா ?

மோகன்—ஆகும். அந்த சாலை நஞ்சை நிலங்கள் வழியாகப் போக வேண்டியிருக்கிறது. அந்த நிலங்களை கிரயம் கொடுத்து வாங்க வேண்டும். ஆகையால்தான் அவ்வளவு தொகை.

சோமு—சரிதாங்க.

மோகன்—அந்த 20 ஆயிரத்திலே பாதித் தொகையான 10 ஆயிரத்தை நீங்க சர்க்கார் கஜானாவில் கட்ட வேண்டும்.

ராமு—பத்தாயிரம் ரூபாய் நாங்க சர்க்கார் கஜானாவில் கட்ட வேண்டுமா ?

சோமு—நாங்களெல்லாம் ரொம்ப ஏழைகளாச்சே. பத்தாயிரத்துக்கு எங்கே போவோம்.

மோகன்—இந்த சாலே அமைத்தால் யாருக்கெல்லாம் நன்மையுண்டாகுமோ அவர்களிடமெல்லாஞ் சென்று அவரவர் இயல்புக்கு ஏற்ற தொகையை வசூல் செய்ய வேண்டியது தான்.

சோமு—என்னத்தைக் கஷ்டப்பட்டு வசூல் செய்தாலும் ஆயிரத்துக்கு மேலே சேர்க்க முடியாதுங்க.

ராமு—என்ன சோமு ! ஆயிரம் ரூபாய் சேர்த்துட முடியுமா என்ன ? பக்கத்திலே இருக்கிற கிராமங்களேயும் சேர்த்தா இன்னைக்கெல்லாம் இருந்தா 300 வீடுகள் தான் இருக்கும். வீட்டுக்கு ரெண்டுன்னு வசூல் செய்தாகூட அது கொடுக்கிறதுகூட கஷ்டந்தான். ரூ. 600 தான் கிடைக்கும்.

மோகன்—ஏன் உங்கள் ஊரில் பணக்காரர்கள் யாரு மில்லேயா.

ராமு—இல்லீங்க. எல்லோரும் ஏழை விவசாயிகள் தாங்க.

மோகன்—பணமாகத்தான் கொடுக்க வேண்டுமென்றில்லே. பணத்திற்குப் பதில் உழைப்பைத் தரலாம். சாலே போடுவதற்கு வேண்டிய நிலத்தை கொடுக்கலாம்.

ராமு—உழைப்புத் தருவதைப்பற்றி கஷ்டமில்லீங்க. வீட்டுக்கு ஒரு ஆள்வீதம் 300 ஆட்கள் வேலே முடியும் வரையில் உழைக்க முடியும். ஆனல் நாம் கொடுப்பதற்குத்தான் வசதியில்லே.

மோகன்—நல்லிடைக்குறிச்சியில் யாரோ சச்சிதானந்தம் பிள்ளேயாமே. அவருடைய நிலங்கள் வழியாகத்தான் இந்த சாலே போடவேண்டியிருக்கிறது.

சோமு—அந்தப் பக்கத்திலே அவருதாங்க பெரிய மிராசு தாருங்க. அந்த பக்கம் முழுவதும் அவருடைய நிலங்கள் தான்.

மோகன்—அவரைக்கேட்டால் ஏதாவது நிலம் கிடைக்குமா ?

ராமு—கிடைக்குது கிடைக்கிலே கேட்டுப் பார்த்து விட்டாப் போவுது. ஆனா, இன்னொ ஒண்ணு.

மோகன்—என்னது ?

ராமு—எங்களேப் போன்ற ஆட்களெல்லாம் அவருகிட்டே போக முடியாது.

சோமு—ஆமாங்க. எங்களுக்காகவாவது ஒரு முறை நீங்க அவரைச் சந்திச்சு இது விஷயமா பேசனுங்க. உங்க பேச்சுக்கு அவசியம் அவர் மதிப்புக் கொடுப்பாருங்க.

மோகன்—அப்படி என்ன காந்தமா இருக்கிறது என் பேச்சில் ?

சோமு—நீங்க அவரைக் கண்டு பேசின காரியம் முடிஞ்சுப் போயிடும்னு நாங்க நம்புறேங்க.

மோகன்—இது விஷயமாக இன்னும் பத்து 15 நாட்களில் சச்சிதானந்தப் பிள்ளேயை சந்திக்கிறேன். நீங்களும் முயற்சி செய்து பாருங்கள் பணம் சேர்க்க. இப்போது முதற்கொண்டே ஆரம்பித்து விடுங்கள். தகுந்த ஆட்கள் யாராவது இருந்தால் சச்சிதானந்தம் பிள்ளேயிடம் நில விஷயமாக ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள்.

ராமு—இதற்காக இடை விடாமல் உழைக்கிறோம். நீங்கள் சச்சிதானந்தம் பிள்ளேயைப் பார்க்க நல்லிடைக் குறிச்சிக்கு வரும் போது உங்களே சந்திக்கிறோம். அப்போ, நாங்கள் விடை பெற்றுக் கொள்கிறோம்.

(இருவரும் கும்பிடுகிறார்கள்.)

மோகன்—நல்லது (மோகனும் கும்பிடுகிறார்).

திரை விழுகிறது

(தொடரும்)

கல்லுப்பட்டி வட்டாரத்தில்

கல்லுப்பட்டி வட்டாரத்தில், 1953-ம் ஆண்டு டிசம்பரில் தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ், மொத்தம் 10,000 ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. 209 நோயுற்ற கால்நடைப் பிராணிகளுக்கு, வைத்திய சிகிச்சை அளிக்கப் பட்டது. 2,117 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சையும், 507 பிராணிகளுக்கு ராணிகெட் நோய்த்தடுப்பு சிகிச்சையும் அளிக்கப்பட்டன. பேரையூர் பல காரிய கூட்டுறவு சங்கத்தின் மூலம், தானியக் கிடங்கு ஒன்று கட்டப்பட்டுவிட்டது. மூன்று சமூகக் கல்வி நிலேயங் களும், இரு மாலேப் பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இரு மக்கள் மனமகிழ் மன்றங்கள் திறக்கப்பட்டன. ஜலதாரை வசதி வேலே, 800 கெஜ நீளத்துக்கு, நடந்தேறியது. ஒரு புதிய கிணறு தோண்டப்பட்டது. மூன்று பழைய கிணறுகள் புதுப்பிக்கப்பட்டன, நான்கு பர்லாங்கு நீளத்துக்கு, சாதாரண ரஸ்தா அமைக்கப்பட்டது.

KA PUBLI
25 FEB 195
MADRAS

சர்வோதயத் திருமணம்



தமிழகத்தில் சுவாமிமலை முருகப் பெருமானின் நான் காம்படை வீடு. பிரபல புண்ணிய யாத்திரை ஸ்தலம். **1954**-ம் ஆண்டில் அமைச்சர் திரு. பரமேஸ்வரன் முதலியோர் ஹரிஜன ஆலயப் பிரவேசம் நடத்தி னர். ஹரிஜனங்களைத் திரட்டி கோயிலுக்குள் சென்றனர்.

செப்டெம்பர் **1955** முதல் திரு. ஆர். எம். எல். பாண்டியன், எம். ஏ., குடந்தை தென் பகுதி சமூகக் கல்வி அமைப்பாளரும், சுவாமிமலை கிராமத் திருப்பணித் தொண்டர் திரு. கே. வீராசாமி அவர்களும், அவ்வூர் பொதுத் தொண்டர்கள் நடேசன், பாரத சேவக் சமாஜ ஊழியர் விஸ்வநாதன், சமூகக் கல்வி நிலைய நிர்வாகி பி. ஏ. முத்து ஆகிய இருவர் உதவி கொண்டும் சுவாமிமலைச் சேரியில் உழைத்து வந்தார்கள். முதன் முதல் ஹரி ஜனங்களுக்காக சமூகக் கல்வி நிலையமும், மாலைப் பள்ளி யும் நிறுவப்பட்டன. சமூகக் கல்வி அமைப்பாளரும், கிராமத் திருப்பணித் தொண்டரும் அபிவிருத்தி அதி காரியும் ஹரிஜனங்களிடமும் மற்ற வகுப்பினரிடமும் நெருங்கிய தொடர்பு கொண்டனர். ஹரிஜனங்களுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. மேன் மக்களும் தங்கள் பொறுப்பை உணர்ந்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக ஹரிஜனங்களை அடிமை கொண்ட கள்ளச் சாராயக்குடி ஒழிக்கப்பட்டது. தன் குல தெய்வத்தின் முன், சென்ற ஸ்ரீ ஜயந்தி அன்று, கள்ளச் சாராயங் குடித்தல், மாட்டுப் புலால் உண்ணல் முதலிய கெட்ட பழக்கங்களை விட்டுவிடுவதென்றும், மீறினவர்களை ஒடுக்குவதென்றும் தீர்மானித்து சத்தி யம் எடுக்கப்பட்டது. அதன் காரணமாக அவர்களிடம் பணமிச்சம் ஏற்பட்டது. அவ்வாறு மிஞ்சிய பணத்தைக் கொண்டு "காந்தி நிகேதன் குருசாமி நாடார் திட்டம்" என ஒரு நூதன சேமிப்புத் திட்டம் ஏற்படுத்தி வாரத் திற்கொரு பசு மாடு வாங்கப்பட்டது. நாளது தேதிவரை ஒன்பது பசு மாடுகள் வாங்கப்பட்டுள்ளன. இம் மாடுகளை யும், சேரியையும், கிராமநல டைரக்டர் திரு. ஜி. வெங்கடாஜலபதி அவர்கள் **1955**-ம் ௵ அக்டோபர் ௴ **22**உயிலும், தியாகி கொடுமுடி ராஜகோபாலன் அவர் கள் **1955**-ம் ௵ நவம்பர் ௴ **23**உயிலும் பார்வையிட்டுப் பாராட்டினர்.

சென்ற மாதம் **1955**-ம் ௵ நவம்பர் ௴ **30**உயில் தஞ்சை கலெக்டர் திரு. என். கிருஷ்ணசாமி, பி. ஏ. பி. எல்., அவர்கள், குருசாமி நாடார் திட்டப்படியுள்ள

சீட்டுக் குலுக்கி எடுத்தார்கள். டெபுடி கலெக்டர் திரு. என். ராமகிருஷ்ணன், பி. ஏ., அவர்களும், அபிவிருத்தி அதிகாரி திரு. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரும் இவ் வேலையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள சமூகக் கல்வி அமைப்பாளர் திரு. ஆர். எம். எல். பாண்டியன், எம். ஏ., கிராமத் திருப்பணித் தொண்டர் திரு. கே. வீரா சாமி மற்றும் இதர தொண்டர்களுக்கும் ஊக்க மும் ஆதரவும் அளித்தார்கள். ஹரிஜனங்களின் பொரு ளாதார நிலையும், சமூக அறிவும், சமூகக் கல்வி நிலை யத்தின் மூலம் ஓரளவு அபிவிருத்தி அடைந்துள்ளன. அவர்கள் கடமை, உரிமை, என்பதின் தத்துவங்களையும் உணர்வாயினர். அவர்களுக்கு மன எழுச்சியும் ஏற்படவே ஜாதி இந்துக்களும், அந்தணர்களும், ஹரிஜனங்களுக்கு வழங்க வேண்டிய உரிமையையும், அங்ஙனம் வழங்கு வதற்கு வேண்டிய நியாயத்தையும் உணர்ந்தனர். இவற்றின் பலனாக 1955-ம் ௵ டிசம்பர்மீ 15௳ வியாழன் காலை 7 மணிக்கு இப்பாரத கண்டத்திலே தனிப் பெரும் சிறப்பு வாய்ந்த சர்வோதயத் திருமணம், ஸ்ரீ சுவாமி நாதப் பெருமான் திரு. முன்பில் நடைபெற்றது. சுவாமி மலை தேவாலயத்தில் நாள்தோறும் பல திருமணங்கள் நடை பெற்று வருகின்றன, இதுவரை ஒரு ஹரிஜனப் பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் இந்து மத ஆசாரப் படிக்கு பலர் அறிய பகிரங்கமாக பட்டரைக்கொண்டு கல்யாணம் நடத்தப்படவில்லை. இப்பாரத நாட்டில் எந்த க்ஷேத்திரத்திலும் இந்த முறையில் நடந்ததில்லை என்றே சொல்லலாம். 15–12–55 வியாழன் அன்று காலை 7 மணிக்கு குடந்தை டெபுடி கலெக்டர் திரு. என். ராம கிருஷ்ணன், பி.ஏ., அவர்கள் தலைமையிலும், குடந்தை தாசில்தார் திரு. ஆர். பண்டரிநாதன் அவர்கள் ஆதரவி லும் சுவாமிநாத பெருமான் கோவிலில் வைத்து ஏர கரம் ஹரிஜனர் சின்னையன் அவர்கள் குமாரத்தி சின்னப் பொண்ணுக்கும், சுவாமிமலை மருத முத்துக் குமாரர் சின்னத் தம்பிக்கும் இந்துமத ஆசாரப்படி திருமணம் நிறைவேறியது. பெண் வீட்டார் சார்பில் குடந்தை தெற்குப் பகுதி சமூகக் கல்வி அமைப்பாளர் திரு. ஆர். எம். எல் பாண்டியன் எம்.ஏ., அவர்களும், மாப்பிள்ளை வீட்டார் சார்பில் குடந்தை தெற்குப்பகுதி அபிவிருத்தி அதிகாரி திரு. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் நின்று நடத்தினர். சுவாமிமலை சமூக ஊழியர், ஜனாப் அமீர் உதின் ராவுத்தர், பஞ்சாயத்து போர்டு தலைவர் சுவாமி மலை திரு. ஆர். வெள்ளைச்சாமி, குடந்தை தெற்குப்பகுதி கதர் தொண்டர், திரு. எம். வியாகப்பன், சமூகக் கல்வி நிலைய நிர்வாகி திப்பிராஜபுரம் திரு. கே. வீராசாமி, கிரா மத் திருப்பணித் தொண்டர் சுவாமிமலை, திரு. ஏ. ஞான சம்பந்தம், பி.ஏ., குடந்தை வடக்குப் பகுதி சமூகக் கல்வி அமைப்பாளர், திரு. ஜி. வெங்கடராம பத்தர், தியாகி கிரா மக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர், துணைத்தலைவர் பஞ்சா யத்து போர்டு உடையாளூர், சுவாமிமலைத் தேவாலய நிர்வாகி திரு. பி. கே. வைத்தியநாதய்யர், பி.எஸ்.ஸி, டிரஸ்டி திரு. ஏ. சாரங்கபாணி உடையார் முதலிய பெரியார் களும் கிராமத் திருப்பணித் தொண்டர்களும், மேள தாளங்கள் முழங்க, சிலம்ப விளையாட்டுகள் ஓங்க மண மக்களையும், ஹரிஜனங்களையும் ஊர்வலமாக அழைத்துச் சென்று திருமணத்தை நடத்தி வைத்தனர். ஏராள மான ஜாதி இந்துக்களும் பிராமணர்களும் திருமணத் தில் கலந்து கொண்டு மணமக்களுக்கு வரிசை வழங்கி னர். தீண்டாமை ஒழிக ஜாதியம் அழிக மதபேதம் மடிக மகாத்மா காந்திக்கு ஜே சர்வோதயம் ஓங்குக என்றும் மக்கள் ஆரவாரம் வானைப் பிளர்ந்தது. எல்லா தெய்வங் களுக்கும் முறைப்படி அர்ச்சனை நடந்தன. டெபுடி கலெக்டர் அவர்கள் மணமக்களை ஆசீர்வதித்துப் பேசிய துடன், சட்டப்படி தீண்டாமை விலக்கப்படுகிறது. மக்கள் மனம் மாறினால்தான் சட்டம் பயன்படும். சமூகக் கல்வி ஒன்றுதான் மக்கள் மனதை மாற்றமுடியும். தமிழகத் தில் உள்ள சகல சமூகக் கல்வி அமைப்பாளர்களும், கிரா மத் திருப்பணித் தொண்டர்களும், திரு. ஆர். எம். எல். பாண்டியன், எம்.ஏ., அவர்களையும் திரு. கே. வீராசாமி யையும் போல இவ்வித சமூக வேலைகளில் ஈடுபட்டால் மக்கள் மனம் விரைவில் மாறி சர்வோதய சமுதாயம் விரைவில் ஏற்பட வழியுண்டாகும் என்றும் அபிவிருத்தி அதிகாரிகள் திரு. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரைப் போல இத்தகைய அபிவிருத்தி வேலைகளை தம் தம் அபி விருத்தி வட்டாரங்களில் அமைதியான முறையில் நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். பின்பு சமூகக் கல்வி அமைப்பாளர் திரு. ஆர். எம். எல். பாண்டியன், எம்.ஏ., அவர்கள் ஹரிஜனங்கள் இந்த நிலையில் இருப்பதற்கு உயர்ந்த ஜாதியினர்தான் காரண மென்றும் உயர்ந்தவர்களின் கடமை ஹரிஜனங்களை நாக ரிகப் படுத்துவதுதான் என்றும், ஹரிஜனத் தொண்டு செய்யாமல் ஹரிபஜனை செய்வது பயனில்லை என்றும், ஹரிஜனங்களை இதுகாறும் அடிமை படுத்திய கொடிய பாவத் திற்காக உயர்ந்த ஜாதியினர் ஹரிஜனத் தேவையை பூர்த்தி செய்து மகாத்மா காந்தி அடிகளின் எண்ணத்தை நிறை வேற்ற முன் வருவதே பரிகாரம் என்றும் கூறினார்கள். திரு. ஏ. ஞானசம்பந்தம், பி.ஏ., குடந்தை வடக்குப்பகுதி சமூகக் கல்வி அமைப்பாளரும், சுந்திரப் பெருமாள் கோயில் திரு. கணேச முதலியார் அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் சொற்பொழிவு ஆற்றினார்கள். நிகழ்ச்சிகள் நிழற்படமாக்கப்பட்டன. பின்னர் சுவாமிமலை திரு. கே. நடேசன் (சமூக ஊழியர்) அவர்கள் நன்றி கூறினார்கள்.

பின்னர் 500-க்கு மேற்பட்ட ஜாதி இந்துக்களும், பிரா மணர்களும், ஹரிஜனங்களும் சமூகக் கல்வி அமைப்பாளர் குடந்தை தெற்குப்பகுதி அவர்களும், அபிவிருத்தி அதிகாரி கோயில் டிரஸ்டி ஏ. ஆர். என். சாரங்கபாணி உடையார் குமாரர் கோவிந்தசாமி உடையார் அவர்களும் குடந்தை வடக்குப்பகுதி சமூகக் கல்வி அமைப்பாளர் அவர்களும், சுவாமிமலை கிராமத்திருப்பணித் தொண் டர் திரு. அப்பு நாயர், உடையாளூர் பஞ்சாயத்து போர்டு,

துணைத் தலைவர் முதலிய பல பிரமுகர்கள் தலைமையில் கோயில் முகப்பில் இருந்து பிரதான வீதிகள் வழியாக மணமக்களை ஊர்வலமாக கொணர்ந்து சேரியில் உள்ள மணமகன் இல்லத்தில் சமூகக் கல்வி அமைப்பாளர் தலைமையிலும் கோயில் டிரஸ்டியின் குமாரர் கோவிந்தசாமி உடையார் ஆதரவிலும் ஒரு சர்வோதய தேனீர் விருந்து நடந்தது. அதில் ஹரிஜனங்கள் பரிமாறினர். மேற்படி விருந்தில் ஜாதி மத வர்க்க பேதமின்றி எல்லோரும் கலந்து கொண்டனர். பின்னர் மணப்படையூர் ஹரிஜனர் திரு. சா. குப்பு அவர்கள் ஹரிஜனங்கள் சார்பில் நன்றி கூறினர். விழா முற்பகல் 11 மணிக்கு இனிது முடிவுற்றது. இவ் விழாவில் தீவிரப் பங்கெடுத்துள்ள கவுரவ சமூக ஊழியர்கள் திரு. கே. நடேசன், திரு. எஸ். விஸ்வநாத அய்யர் பாரத சேவ சமாஜ ஊழியர் முதலோர்களின் சேவை போற்றத் தக்கது.

சொல்லிக் கொடுப்பாயோ, உழைக்கும் வழி?

"வா. கோ. பா."

ஓடும் ரயிலே! உன்போல் நானும் உழைக்கும் வழி [சொல்லிக்கொடு

பாடும் பெட்டியே! உன்போல ஓயாமல்,
பண்ணிசைக்கும் வழி சொல்லிக்கொடு
வாடும்பொழுதும் மணங்குன்றாத, வகுளமே! உன் வழி [சொல்லிக்கொடு

நாடும் நகரமும் செழிக்கவே நானும்
நல்லவை செய்ய வேண்டுகிறேன்.

'அலுக்காமல்' சலிக்காமல் வரவேற்று நோய் தீர்க்கும்
ஆஸ்பத்திரியே! உன்னைப்போற்றுகிறேன்!
இலக்கமும் எழுத்தும் எல்லாமும் கற்பிக்கும்
இளங் கல்வி மன்றமே நீயும் வாழ்க!
பலிக்காமல் போகுமோ? பாரத சுதந்திரம்
படிப்படியாகப் பயன் பெறுவோம்!
இலட்சிய நிலையை எட்டிப் பிடிப்போம்
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே!

அறிவிப்பு

"கிராம நலம்" பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம்	..	ரூ. 150- 0- 0
உள் அட்டைப் பக்கம்	..	ரூ. 125- 0- 0

இதர பக்கங்களில்:

பக்கம் ஒன்றுக்கு	.. ..	ரூ. 100- 0- 0
அரைப் பக்கம்	.. ..	ரூ. 60- 0- 0

சந்தா விவரம்

வருட சந்தா	.. .. ..	ரூ. 1- 8- 0
ஆறு மாத சந்தா	.. ..	ரூ. 0-12- 0

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தனிப் பிரதி—இரண்டு அணா

தனிப் பிரதிகளை அனுப்ப, தபால் பில்லைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்ற விவரங்களுக்கு, பின்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள்:

பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட்,
சென்னை-9.

Public Relations Officer,
(Community Development),
Public (R.D.P.) Dept.,
Secretariat,
Madras-9.

இப் பத்திரிகை, சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி இலாகாவால் நடத்தப்படுகிறது. ஆயினும், இதில் வெளியிடப்படும் அபிப்பிராயங்களும், காணப்படும் கருத்துக்களும், சென்னை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றன என்பதில்லை.

இப் பத்திரிகையில் வெளியிடும் பாட்டு, கதை, நாடகம் முதலியவற்றில் வரும் பெயர்கள் யாவையும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல.

சிறிய கிராமங்களில் அரிய சாதனைகள்

[மதுரை ஜில்லாவிலுள்ள, G. கல்லுப்பட்டியிலும், பள்ளபட்டியிலும், கிராம மக்கள் புரிந்துள்ள அரிய சாதனைகள்பற்றி, அக் கிராமங்களின் சமுதாய நலத் திட்ட கமிட்டியாரே தெளிவாக இங்கு கூறுகிறுர்கள். போக்குவரத்து வசதிகள் அதிகமாக இல்லாமல், ஒருபக்கமாக ஒதுங்கிக் கிடந்த கிராமங்களில் பற்பல அபிவிருத்தி வேலைகள் வெற்றிகரமாக நடைபெற்று வருவதற்கு முக்கிய காரணமாக விருப்பது, கிராம மக்கள், சமுதாய நலத்திட்டங்கள் மீது கொண்டுள்ள ஒத்துழைப்பு உணர்ச்சியே. அவர்கள் தங்களுடைய அனுபவங்களை இங்கு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறுர்கள்.

—ஆசிரியர்]

G. கல்லுப்பட்டி சமுதாய நலக் கமிட்டியார் கூறுவதாவது :—

" காடுகளுக்கு மத்தியிலே வெளியுலகத் தொடர்பில்லாமல் முடங்கிக் கிடந்த சிறிய கிராமம் எங்கள் ஊர்! எங்கள் நிலையைப் பற்றிக்கூடச் சிந்திக்கப்பொழுதில்லாத ஏழை விவசாயிகள் நாங்கள்.

ஒரு நாள் .... எங்கள் காட்டின் வழியாக சிறிய கார் ஒன்று வந்து மேலே வரமுடியாமல் நின்றது. அங்கிருந்து நடந்து வந்த அந்த அதிகாரியைக் கண்டதும் நாங்கள் திகைப்புடன் கூடினேம்! எங்களோடு சாவடியில் அவரும் அமர்ந்தார். அச்சத்துடன் ஒதுங்கிய எங்களுடன் அன்போடு பேசினுர். எடுத்த எடுப்பிலேயே அவரது பேச்சு பரிவுபெற்றவன் குழந்தைகளோடு பேசுவது போலிருந்தது.

சமுதாய நலத்திட்டத்தில் எங்கள் கிராமமும் சேர்க்கப்பட்டிருப்பதாக அவர் கூறினுர். திட்டத்தை விளக்கினுர். " கிராம நல்னுக்கு மக்களின் ஒத்துழைப்பு ஒன்றுதான் உயிரளிக்க முடியும்—ஒற்றுமை போடு முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டால் உயர்வடையலாம்! " என்பதை எடுத்துக் கூறினுர்.

" ஏன்? நீங்கள் நினைத்தால் உங்களுக்கு அவசியம் தேவையான பாதையை உண்டாக்க முடியாதா? " என்று கேட்டார்.

அவரது வார்த்தைகளைக் கேட்டபோது "முடியாது!" என்ற பதிலை எங்களால் கூறமுடியவில்லை. அவர் மேலும் பேசினுர்.

எங்களுக்கான பாதை வசதியின் அடிப்படை ஆரம்பம் எங்களது கையிலிருப்பதை உணர்ந்தோம். தன்னம்பிக்கை உண்டாகியது. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஒரு உறுதி உண்டாகியது. எங்களது ஒத்துழைப்பைக் கொடுக்க ஒப்புக் கொண்டோம்!

எங்களுக்குள் ஏற்பட்ட எழுச்சியின் காரணமாக கிராமத்தில் கூட்டங்கள் போட்டோம். பொது நலனைக் கோரி எங்களுக்குள்ளே இருந்த பிளவுகள் விடுவிக்கப்பட்டது. கிராமம் முற்றிலும் ஒரே குரலுக்குக் கையுயர்த்தும நிலைக்கு கொண்டுவரப்பட்டது. கிராம சேவக் எங்களோடு குடியிருந்து ஒத்துழைத்தார்.

எங்களுக்குத் தேவையான பாதை வசதிக்காக இரண்டு மாத காலம் ஆண் பெண் அனைவரும் அயராது உழைத்தோம். $2\frac{1}{2}$ மைல் நீளமுள்ள ரோடு போடப்பட்டது. சமுதாய நலத்திட்டத்திலிருந்து இடையிடையே பாலங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

ரோடு முடிந்தது. அதிகாரி வந்தார். அவரது முகத்திலேயே மகிழ்ச்சி! எங்களது மனதிலே நிறைவு! உழைப்பின் பயனைக் காணும்போது எங்களது ஒற்றுமையின் பெருமையை அளவிடமுடிந்தது.

பெருகிய எங்கள் உற்சாகத்தில் கிராம கமிட்டி அமைத்தோம். கிராம நலத்துக்கான திட்டங்களை கிராம சேவக் அமைத்தார்.

அடுத்து குடிதண்ணீர் வசதியில் எங்களது கவனம் திரும்பியது. சீர்கேடான விவசாய கிணறுகளிலேயே குடிதண்ணீர் எடுத்து உபயோகப்படுத்தி வந்தோம். " இந்த நாகரிக உலகத்தில்—குடி தண்ணீர் கிணறு இல்லாமல் குடியிருப்பதா! " என்ற கேள்வி எழுந்தது எங்களுக்குள்! நாங்களே கிணறுவெட்ட முனைந்தோம்! எங்கள் உழைப்போடு சமுதாய நலத்திட்டத்திலிருந்து உதவி கொடுக்கப்பட்டது. சுகாதார வசதியோடு கூடிய குடி தண்ணீர் கிணறு வேலை முடிந்தது. அத்துடன் பெண்களுக்கென குளிக்கும் அறையும் கட்டப்பட்டது. எங்கள் கிராமத்தில் புது மலர்ச்சி யுண்டாகியது!

நாங்கள் அத்துடன் ஓயவில்லை. எங்களது வருங் காலத்தைக் குறித்து திட்டமிடும் சிந்தனை உண்டாகியது.

" கோவில்களெல்லாம் பள்ளிகளாக மாறவேண்டும்" என்று பாரதியார் என்ற புலவர் பாடினுராம். அதையெல்லாம் நினைத்தோம்.

படிக்க வேண்டிய பருவத்தில் எங்களது குழந்தைகள் வீண்பொழுது போக்குவதை உணர்ந்தோம். எங்களில் பெரியவர்களுக்கு படிக்கவோ எழுதவோ தெரியாது. எங்களது சந்ததிகளும் கட்டைவிரலைக்கருப்பாக்கிக்கொள்ள வேண்டுமோ ? என்பதை நினைத்தபோது எங்களுக்கே அவமானமாக இருந்தது. இந்த அவமானத்தை யெல்லாம் ஆர்வமாக்கி புதிய பள்ளிக்கூடம் அமைப்பதில் எல்லோரும் ஈடுபட்டோம்.

சமுதாய நலத்திட்ட அதிகாரியின் மேற்பார்வையில், உழைப்பின் மூலமாகவும் பொருளுதவியாலும் பள்ளிக் கட்டிட மொன்றை அமைத்தோம். சர்க்காரின் அங்கீகாரம் கிடைக்கப்பெருத ஒரு வருடம் வரையிலும் இரு ஆசிரியர்களுக்கு நாங்களே மாதம் ஒன்றுக்கு ரூ. 100/- வீதம் சம்பளம் கொடுத்தோம். அதன் பிறகுதான் சர்க்காரின் அனுமதி எங்களுக்குக் கிடைத்தது.

இதற்குள்ளாக சமுதாய நலத்திட்ட ஊழியர்களுக்கும் எங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. உயிர் கொடுக்கும் அன்பர்களாக எங்களோடு பழகினர்கள் !

ஆழப்படுத்த வேண்டிய விவசாய கிணறுகளுக்கு **நீண்டகால கடனுதவி** செய்யப்பட்டது. நிலத்தை பண்படுத்தும் வகையில் புது முறைகள் புகுத்தப்பட்டன ! **பொறுக்கு விதைகளினல்** நல்ல பயனடைந்தோம் ! **"விவசாய அபிவிருத்தி சங்கம் !", "கோழி வளர்ப்புச் சங்கம்"** ஆகியவைகள் உண்டாக்கப்பட்டன !

கூட்டு சக்தியில் நம்பிக்கை வளர்ந்து உழைப்பதில் தனி உற்சாகம் ஏற்பட்டது. இந்த உற்சாகத்தோடு நாங்கள் நிமிர்ந்து பார்த்தபோது — எங்கள் குழந்தைகள் பயிலும் பள்ளி கூரைக் கட்டிடமாக இருந்தது நெஞ்சை உறுத்தியது. எங்கள் கிராம சேவக்........ " உங்கள் பள்ளியை ஆதாரக் கல்வி பாடசாலையாக மாற்ற வேண்டும் ! " என்றார்.

புதிய, பெரிய கட்டிடம் தேவைப்பட்டது. மாணவர்கள் விவசாய கல்வி பயில **ஒரு ஏக்கர் புஞ்சை தோட்டம் கிணறுடன்** கிராமத்திலிருந்து கொடுக்கப்பட்டது. புதிய **பள்ளிக் கட்டிடத்திற்காக** எங்களுக்கு முன்னின்ற பெரிய வேலையைக் கண்டு நாங்கள் மலைக்கவில்லை. ஏற்றத் தாழ்வில்லாது இரவும் பகலுமாக எல்லோரும் உழைத்தோம், கட்டிடம் எழுந்தது ! நாங்கள் சளைக்கவில்லை ! எங்கள் உறுதி மாறவில்லை !

அதோ ! ...... எங்கள் உழைப்பின் பயனுல் உருவான கட்டிடம் தலை நிமிர்ந்து நிற்கிறது. எங்களது ஒற்றுமையின் சின்னமாக விளங்கும் இதுவே எங்களது கோவில் ! தளர் நடைபோட்டு பயின்று வெளியேறும் குழந்தைகள் தான் எங்களது தெய்வம். இவர்களது படிப்பின் குரலோசை எங்கள் காதுகளில் ரீங்காரமிட்டு உழைப்பின் பெருமையை எடைபோடுகிறது.

எங்களைக் காணவந்த பிரதம சமுதாய நலத்திட்ட அதிகாரி **ஸ்ரீ எஸ். கே. டே......** அவர்கள்.....

"அறிவுச் சுடர்விடும் கண்களுடன் தீவிரமாக உழைக்கும் ஆட்களைக் கண்டேன். அவர்கள் சம்மந்தப்பட்ட வரையில் தடங்கலற்ற பாதை காட்டப்பட்டால் போதும்...... வேறென்றும் தேவையில்லை ! " என்று கூறினர்.

முடங்கிக்கிடந்த இந்த சிறிய கிராமம் போற்றப்படும் பேறு பெற்றது எங்களது உழைப்பின் சக்தியினல் தான் என்பதை பூரணமாக உணர்ந்து கொண்டோம்.

ஒரேகுரலாக நாங்கள் வாழும் வழியை வகுத்து முன்னின்று வழிகாட்டிய சமுதாய நலத்திட்ட அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் எங்கள் நன்றி ".

பள்ளபட்டி சமுதாய நலத்திட்டத்தார் கூறுகிருர்கள்.

தூண்டுகோல் இல்லாத விளக்கின் நிலையில் அப்போது எங்கள் சமுதாயம் இருந்தது. சமுதாய நலத்திட்டம் எங்களுக்குள்ளே ஒளியை நிரப்பியது. நலத்திட்ட அதிகாரிகள் எங்களோடு நெருங்கிப்பழகி அவ்வப்போது ஆலோசனைகள் கூறி வழி காட்டினர்கள். கிராம ஊழியர்கள் உடனிருந்து எங்களோடு ஒத்துழைத்தார்கள். மக்களும் சர்க்காரும் ஒன்று படும்போது தான் இந்த நிரந்தரமான விடுதலையைப் பெற முடியும் ! என்ற கருத்து எங்கள் இதயத்திலே இடம் பெற்றது !

அதிகாரிகளும் ஊழியர்களும் எங்களுடன் நெருங்கிப் பழகினர்கள். நாங்கள் ஓய்ந்தபோது உற்சாகமூட்டினர்கள். ஒதுங்கியபோது உடனிருந்து ஊக்கப்படுத்தினர்கள். கிராம சேவகரின் உதவியோடு கிராம நலக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. ஏற்றத் தாழ்வில்லாது, பேதமற்ற நிலையில் நாங்கள் ஒன்று கூடினேம். நல்ல திட்டங்களைச் செயல் படுத்த முனைந்தோம்.

அறியாமை நீங்கி அறிவு ஒளிவீச கல்வி அவசியத் தேவையல்லவா ! கல்வி யறிவில்லாத மனிதன் தன்னையே உணர்ந்து கொள்ளாத நிலையில் முடங்கிக் கிடக்கும் காட்சிகள் மாறவேண்டாமா ?

கல்வி வசதியில் எங்கள் கவனம் திரும்பியது.

ஆரம்பத்தில் புதிய பள்ளிக்கட்டிடம் ரூ. 4,500 பெறுமானமுள்ளதாக அமைத்தோம். திட்டமிட்ட வேலை சிறந்த முறையில் உருவானது கண்டு எங்கள் உற்சாகம் பெருகியது. பின்னர் சமுதாய நலத்திட்டத்தின் உதவியோடு பள்ளிக்கூட கட்டிட மொன்றை மூடித்தோம். பஞ்சாயத்து போர்டிலிருந்து கட்டிடமொன்று நடைபெற்று வருகிறது. எங்கள் உழைப்பும் — சமுதாய நலத்திட்டத்தின் ஒத்துழைப்பும் எங்கள் பள்ளியை உயர்தர ஆரம்ப பாடசாலையாக உயர்த்தியது ! இப்போது மீண்டும் புதிய பெரிய கட்டிடம் ஒன்று தேவைப்பட்டது. ஜில்லா போர்டிலிருந்தும், சமுதாய நலத்திட்டத்திலிருந்தும் கிடைத்த உதவியோடு—கிராமத்து பங்கையும் சேர்த்து புதிய கட்டிட வேலை நடந்துக்கொண்டிருக்கிறது. இந்தக் கட்டிடங்கள் முடிவுற்றல் 500 மாணவர்கள் பயிலத்தக்க பாடசாலை அமைந்துவிடும் என்பதை நாங்கள் தலைநிமிர்ந்து கூற முடிகிறது. ஜில்லா போர்டிலிருந்து கொடுக்கப்படும்

வாடகைக் கட்டிடத்திலிருந்து எங்கள் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு பள்ளி மாற்றப்படு கிறது என்பதைப் பூரிப்புடன் தெரியப்படுத்திக் கொள்கி றோம். எங்கள் குழந்தைகள் ஆதாரக்கல்வி கற்கும் பொருட்டு ரூ. 10,000 மதிப்புள்ள 2 ஏகர் 74 சென்ட் பரப் புள்ள நஞ்சை நிலத்தை கிராம பொதுவிலிருந்து இறை மாக கொடுத்துள்ளோம். எங்கள் தெருவெல்லாம் கல்வி மணம் தவழுகிறது. பயின்று வரும் பாலர்கள் வருங் காலத்தில் நாட்டை வளப்படுத்தும் அறிஞர்கள் ஆவார்க ளென நாங்கள் காணும் கனவு வீணாகுமா ?

சமுதாய நலத்திட்டத்தின் ஒத்துழைப்பால் பொது வேலைகளில் எங்களுக்குள் சளைக்காத புதுமலர்ச்சி பூத்தது. உழைப்பின்போது ஏற்படும் அயர்ச்சி, கிடைத்த பலனின் மதிப்பை எடைபோடும் போது மறைந்து விடுமல்லவா !

அடுத்து கிராம நலனுக்கான மற்றைய திட்டங்களை எடுத்துக்கொண்டோம்.

பெண்களின் நலனுக்கான தாய் சேய் நலவிடுதி ஏற் படுத்தப்பட்டது. ஆரம்பத்திலிருந்து இந்த பிரசவ விடுதிக் காக பஞ்சாயத்து போர்டிலிருந்தும் கிராமத்திலிருந்துமாக கட்டிடவாடகை கொடுக்கப்பட்டது. 45 செ. நிலம் (சுமார் மதி ப்புரூ.1500) தாய்சேய் நலவிடுதி கட்டிடத்துக்காக இறுமாகக் கொடுக்கப்பட்டது. கிராமமும் பஞ்சாயத்து போர்டும்—சமு தாயநலத்திட்டமும் ஒன்று சேர்ந்து புதிய பிரசவ விடுதியை கட்டி முடித்தன. மேலும் 7 குடிதண்ணீர் கிணறு சுகாதார வசதியோடு கட்டப்பட்டு 8 குளிக்கும் அறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வார்தா முறைப்படி 12 கக்கூஸ் கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் தற்போது சமுதாய நலத் திட்ட உதவியோடு ரூ. 15,000 மதிப்புள்ளபாதுகாக் கப்பட்ட குடிதண்ணீர் கிணறு வேலை நடை பெறுகிறது.

ஒவ்வொரு பொது வேலையின் நற்பயனைக் காணும் போது அள்ளிக் கொடுக்கும் கைகள் சோர்வடையவில்லை. ஒவ்வொரு குடும்ப நலனும் கிராம முன்னேற்றத்தோடு இணைந்து விடும்போது வேற்றுமைக்கு இடமேது ?

எல்லோரும் உழைத்து 6 பர்லாங் நீளமுள்ள ரோடு போக்குவரத்து வசதியை நாங்களே செய்துகொண்டோம். சமுதாய நலத்திட்டத்திலிருந்து பாலங்கள் கட்டிக்கொடுக் கப்பட்டன.

உழவனின் உயிர்நாடி கால்நடைகளல்லவா? சமுதாய நலத்திட்டத்தின் உதவியோடு கால்நடை வைத்திய நிலை யம் ஒன்றை கட்டி முடித்தோம். இந்த நிலையத்தில் இரண்டு முரா எருமைக் கிடாக்களும், காங்கேயம் காளை களும் இனவிருத்திக்காக வரவழைக்கப்பட்டுள்ளன. பஞ் சாயத்து நிதியிலிருந்து ரூ. 1,000 செலவில் கட்டிட மொன்று கட்டப்படுகிறது. மேலும் பள்ளபட்டியை கால் நடைகளின் வளர்ச்சிக்காக கேந்திர ஸ்தானமாக தேர்ந் தெடுக்கப்பட்டது, சமுதாய நலத்திட்டத்தாரின் பற்றுதலைக் காட்டுகிறது.

இந்த நிலையங்களின நற்பயனை கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் பகிர்ந்துகொள்ளும்போது அடுத்துச் செய்யவேண்டிய பொது வேலைகளில் உற்சாகத்தோடு பங்குகொள்ள முன் வந்தார்கள்.

வார்தா முறைப்படி மாதிரி எண்ணெயாட்டும் நிலையம் பள்ளபட்டியில் ஏற்படுத்தவேண்டுமென சமுதாய நலத் திட்டத்திலிருந்து கூறப்பட்டது. கிராமத்திலிருந்து 1 ஏகர் நிலம் நன்கொடையாகக் கொடுத்தோம். சமுதாய நலத் திட்டத்தின் உதவியோடு எண்ணெயாட்டும் நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்திலும் புதுமுறைகள் புகுத்தப்பட்டுள்ளன. சமுதாய நலத்திட்டத்திலிருந்து, விவசாய கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளுக்காகவும் நீண்டகால கடன் கொடுக்கப்பட்டது. ஆயில் என்ஜின்களும் கொடுக் கப்பட்டன. ஏராளமான உரக் குழிகள் போடப்பட்டு உரம் நல்லமுறையில் பயன் படுத்தப்படுகிறது. தழை உரங்கள் நடைமுறை உபயோகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன, இவ்வாண்டு முடிவிற்குள் மின்சாரம் கிடைத்து விடும் என்ற உறுதி எங்களுக்கேற்பட்டுவிட்டது.

முடிவுற்ற பொதுவேலைகளைத் திரும்பிப் பார்க்கும் போது எங்களுக்குள்ளேயே புத்துணர்ச்சி ஏற்படுகிறது. "எங்களுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகளை நாங் களே ஒன்றுபட்டு உருவாக்கினோம் ! " என்பதை எண்ணும்போது எங்கள் உள்ளம் பெருமிதத்தால் நிறைந்து விடுகிறது. மறைந்து கிடந்த, தமிழனின் தனிப் பெரும் பண்புகளான, அன்பு, அறம், தியாகம் ஆகிய உணர்ச்சிகளுக்கு புத்துயிர் அளித்து, பொதுப் பணியில் எல்லோரையும் ஏற்றத்தாழ்வில்லாது உற்சாகத்தோடு உழைக்கும்படி செய்யும் சமுதாய நலத்திட்டம் எங்களுக்கு நல்ல வழி காட்டியது.

திட்டத்திலுள்ள அதிகாரிகளும், மக்களும், சகோதரர் களாக ஒன்றுபட்டு செயல்புரிந்தது குறிப்பிடத்தக்க தொன்றாகும். சர்க்காருக்கும், மக்களுக்கும் இப்பகுதியில் ஏற்பட்டுள்ள தொடர்பு பிரிக்க இயலாததொரு பாசத்தை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளபட்டிக்கு அருகாமையில் உள்ள சிறுமலை அடி வாரத்தில் மாவூத்தாறு அணைக்கட்டு எங்களது அவசிய தேவைகளில் ஒன்றாகும். இதனால் 6,000 ஏகர் புஞ்சை நஞ்சையாக மாறும் வசதி இருக்கிறது. இந்த அணைக் கட்டு திட்டத்தில் எங்களது பங்கைக் கொடுத்து முன் னின்று உழைக்கவும் தயாராக இருக்கிறோம்.

—❖—

குழந்தைகளே நாட்டின் செல்வங்கள்

" குழந்தைகளே, நீங்கள்தான் நாட்டின் செல்வங்கள். தேசத்தின் வருங்காலம் உங்களைத்தான் நம்பியிருக்கிறது. உங்கள் மலர்ந்த முகங்களைக் காணும்பொழுது இந்தியாவின் வருங்காலத்தின் படம் என் கண்முன் வருகிறது. உங்கள் உடலும் மனமும் வளர்ச்சியடையவேண்டும். விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்தாமல், படிப்பிலும் கவனம் செலுத்தவேண்டும். தோழமை உணர்ச்சி, சகோதர உணர்ச்சி எல்லாம் உங்களுக்கு வேண்டும். இதர உணர்ச்சிகள் உங்கள் பிஞ்சு நெஞ்சத்திலேயே வளர்ந்து விட்டால், உங்களுக்கும் நல்லது, வருங்காலத்தில் நாட்டுக்கும் நல்லது. நீங்கள் மனிதகுலத்தில் மணிகளாகத் திகழ்வீர்கள். "

என்று பிரதமர் நேருஜி, 1955-ம் ஆண்டு நவம்பர் மீ 14-ந் தேதியன்று, புது டில்லியிலுள்ள ஸ்டேடியத்தில், சுமார் 4,000 குழந்தைகள் நேருஜியின் பிறந்த நாளைக் கொண்டாடி அவரை மகிழ்வித்தபோது கூறினார். அன்று நடந்த சிறுவர், குழந்தைகள் நிகழ்ச்சிகளிலே, 150 பெண் குழந்தைகளின் கிராமிய நடனங்களும் உடற்பயிற்சி நிகழ்ச்சிகளும், அங்கு குழுமியிருந்த சுமார் 75,000 மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

நேருஜியின் பிறந்த தினக் கொண்டாட்டத்தை யொட்டி, சமுதாய நலத் திட்டப் பிரதேசங்களில் பல பள்ளிகூடங்களையும் குழந்தைகளுக்கு மற்றும் வசதிகள் செய்து தரவும் கிராமவாசிகள் முன் வந்தனர். 764 பள்ளிகள், குழந்தைகள் பூங்கா, நூல் நிலையங்கள், குழந்தைகள் ஸ்தாபனங்கள் முதலியன அமைக்க, நிலங்களையும் பொருள்களையும் உழைப்பையும் நன்கொடைகளாகத் தருவதாகத் தெரிவித்து, இந்தியா முழுவதிலுமிருந்து, கடிதங்களும், தந்திகளும், சமுதாய நலத் திட்ட நிர்வாக ஸ்தாபனத்துக்கும் வந்தன.

குழந்தைகள் வளர்ச்சியில் மாறுதல்

முன்பெல்லாம் கிராமங்களில் வாழும் குழந்தைகளைப் பற்றி ஒருவரும் அக்கறை காட்டவேயில்லை என்று சொன்னாலும் மிகையாகாது. கிராமத்தில் குழந்தை வளர்வது, அங்கு நிலவியிருக்கும் சூழ்நிலையைப் பொறுத்து இருந்தது. ' விதிப்படி நடக்கட்டும் ' என்று கூறுவார்களே, அதுபோல்தான், குழந்தையின் வளர்ச்சி ' விதிப்படி ' நடக்க விடப்பட்டிருந்தது. குழந்தைகள், இளஞ்சிறார்களாக வளர்ந்து, அறிவு பெருகி, இளங்காளைகளாவதற்கு அத்தியாவசியமாகத்தேவைப்படும் பள்ளிகள், விளையாட்டுத் திடல்கள், சுகாதார சூழ்நிலை, ஆக்கத் திறனை உண்டுபடுத்துவதற்குரிய சந்தர்ப்பங்கள் ஆகியவற்றை அளிப்பதற்கு, திட்டவட்டமாக ஓர்வித ஏற்பாடும் செய்யப்படாமலிருந்தது.

நிலைமை இவ்வாறிருந்தபோது, நாடெங்கும் சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக ஆரம்பித்தன. இத்திட்டங்களின் கீழ், குழந்தைகளுக்கும் பல பலன்கள் கிட்டுவதற்குரிய, அபிவிருத்தி வேலைகளும் நடைபெற ஆரம்பித்தன. இப்போது இளங் குழந்தைகளின் பிஞ்சு மனதிலே நம்பிக்கை உதித்துவிட்டது. தாங்கள் இந்தியாவின் வருங்கால பிரஜைகள் என்ற ஹோதாவில் நாட்டுக்கும் சமூகத்துக்கும், நல்ல பணி ஆற்றமுடியும் என்ற எண்ணம் அவர்கள் மனதிலே பதிந்து விட்டது.

குழந்தைகள் பராமரிப்பு

அபிவிருத்தித் திட்ட வட்டாரங்கள் அநேகவற்றில், குழந்தைகள் பராமரிப்பு ஒரு முக்கிய பணியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கருத்து, நாடெங்கும் பரவிவருகிறது. குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும், உள்ள வளர்ச்சிக்கும் தேவைப்படும் வசதிகளைத் திட்டமிட்டவகையில் செய்து தருவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. இந்திய கிராமங்களில் உள்ள லட்சக்கணக்கான குழந்தைகள் நலனைப் பேணுவது பெரிய பிரச்னையாக விளங்குகிறது. ஆனபோதிலும், இதைத் தீர்க்கத் திட்ட வேலைகள் துவக்கப்பட்டு, அவற்றால் இதுகாறும் ஏற்பட்ட பலன்களும், அவ்வேலைகளை நாம் மேற்கொண்டும் தொடர்ந்து புரிவதற்கு நமக்கு உற்சாகத்தையூட்டி வருகின்றன.

கிராமக் குழந்தைகள் நலனைக் கவனிக்கும்போது கல்வியைக் குழந்தைகளுக்குப் புகட்டுவதுபற்றியே முதன் முதலாகக் கவனிக்கவேண்டும். இத்துறையில், கிராம மக்கள், வெகுவாகத் தங்கள் பங்கைச் செலுத்தி, பள்ளி அபிவிருத்தித் திட்ட வேலைகளை வெற்றிகரமாக முடிப்பதற்குப் பெரிதும் உதவியிருக்கிறார்கள். 1952-ல் நேருஜி பிறந்த தினத்தன்று, அவர்கள் 318 ஆரம்ப நடத்தரப் பள்ளிகளை வெகுமதியாக அளித்தார்கள். இம்மாதிரியான வெகுமதிகள் நாளடைவில் அதிகமாகிக்கொண்டே வந்திருக்கின்றன. 1953-ல் வெகுமதியாக அளிக்கப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை 832 ஆகவும், 1954-ல் அது 953 ஆகவும் உயர்ந்து இருந்தது. பள்ளிகள் கட்டுவதற்காகவும், குழந்தைகள் நலனுக்காக, மற்றும் இதர வசதிகளைச் செய்து தருவதற்காகவும், மக்களால் வெகுமதியாக அளிக்கப்பட்ட நிலங்களின் மொத்த விஸ்தீரணம் 1953-ல் 2,567 ஆகவும் 1954-ல் 5,314 ஆகவும் இருந்தது.

சிறுவர் பூங்காக்கள்

அநேக வட்டாரங்களில், சிறுவர் பூங்காக்களும், விளையாட்டுத் திடல்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் சமுதாய வாழ்வின் லட்சியம், கூட்டுறவு முயற்சியால் கிட்டும் நன்மை ஆகியவைபற்றி குழந்தைகளுக்கும் போதிக்கப்படுகின்றன. தான் செய்வதன் மூலம் கற்றுக் கொள்ளும் முறையைப் பின்பற்றுவதற்கும், இத் திட்ட வட்டாரங்களில், குழந்தைகளுக்கு உற்சாகமளிக்கப்படுகிறது. வருங்காலத்தில், கிராம சமுதாயத்துக்குப் பயன்படும் நாட்டுப்பற்று மிகுந்த காளைகளாக விளங்குவதற்குத் தகுந்தாற்போல், குழந்தைகள் வளர்வதற்குரிய கொள்கைகளைப் பரப்புவதற்கு, குழந்தைகள் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. சென்ற இரண்டு ஆண்டுகளில், சமுதாய நலத் திட்ட அதிகாரிகள், அநேக நூல் நிலையங்களை அமைத்து, விளையாட்டுச் சாமான்களை வாங்கி குழந்தைகளுக்கு வழங்கியுள்ளார்கள். 1953-ல் இதற்காக வழங்கப்பட்ட தொகை 96,037 ரூபாய். 1954-ல், இத் தொகை 1,30,440 ரூபாயாகப் பெருகியது.

குழந்தைகள் நலத் திட்டங்கள்

அந்தந்தத் திட்ட வட்டாரங்களில் வாழும் மக்களின் ஆதார வசதிகள், குழந்தைகள் நலனுக்காக, அவர்கள் காட்டும் ஆர்வம் ஆகியவற்றிற்குத் தகுந்தாற்போல், குழந்தைகள் நலத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஆனபோதிலும் இம்மாதிரியான திட்டங்கள் பெருக வேண்டுமென்றும், இவை வெற்றிகரமாகத் தங்களுடைய கிராமங்களில் நடக்கவேண்டுமென்றும் மக்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் பெருகி வருகின்றன.

கொஞ்சம் வயது வந்த இளஞ் சிறுர்களோ, திட்ட வேலைகளுக்குத் தங்கள் பங்கையும் செலுத்தி வருகிறுர்கள். இளைஞர் முகாம்கள் நடைபெறும்போது, அவர்கள் ஆக்க வேலைகளில் ஈடுபடுவதுடன், திட்டவேலைகளைச் செய்ய மக்களுக்கும் உதவி புரிந்து வருகிறுர்கள். திட்டம் சரிவர நிறைவேறுமா ? என்று சந்தேகப்பட்டுக்கொண்டிருந்த சில கிராமவாசிகள்கூட, இளைஞர்கள் இவ்வாறு உற்சாகத்துடன் திட்ட வேலைகளில் ஈடுபடுவது கண்டு, மனம் மாறி, தாங்களும் ஒத்துழைக்க முன்வந்துள்ளார்கள். இந்த அற்புதமான மாறுதலைச் செய்துள்ள இளஞ் சிறுர்களை யார்தான் போற்றுமலிருக்கமுடியும்.

அகில இந்திய கூட்டுறவு வார விழா

ஊத்துக்கோட்டை வட்டாரத்தில், அகில இந்திய கூட்டுறவு வார விழா, 1955-ம் ஆண்டு நவம்பர் மீ 9–11 உ தேதிகளில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. முதல் நாளன்று, நாகலாபுரத்தில் மாபெரும் ஊர்வலத்துடன் விழா ஆரம்பமாயிற்று. அவ்விழாவுக்குத் தலைமை வகித்த ஜி. தர்மலிங்கம், விவசாயிகளின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு, பல காரிய கூட்டுறவு ஸ்தாபனங்கள் எங்ஙனம் பயன்படுகின்றன வென்பதை விளக்கினுர். பல பிரமுகர்கள் கூட்டுறவு பற்றியும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் பேசினுர்கள். பள்ளிச் சிறுவர்களின் சங்கீத நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, சினிமாப் படங்களும் காண்பிக்கப்பட்டன.

இரண்டாம் நாளன்று, ரல்லாபாடியில் நடைபெற்ற விழாவின்போது ஸ்ரீ எம். தர்மலிங்கம், எம்.எல்.ஏ., நெசவாளருக்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கிடைத்துவரும் பலன்களைப் பற்றிக் கூறினுர்.

கடைசி நாளன்று, ஊத்துக்கோட்டையில் நடைபெற்ற விழாவுக்கு, கிராம நல டைரக்டர், ஸ்ரீ ஜி. வெங்கடாசலபதி தலைமை வகித்தார். கூட்டுறவு விவசாய சங்கங்களையும், பல காரிய கூட்டுறவு சங்கங்களையும் எல்லா கிராமங்களிலும் ஆரம்பித்து நடத்தவேண்டுவதன் அவசியத்தை, அவர் தமது தலைமை உரையில் வலியுறுத்தினுர். கூட்டுறவு சங்கங்களை அமைத்து, அவைகள் மூலம் கிராமத் தொழில்களை நடத்தவேண்டுமென்று அவர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

ராஜ்யத்துக்கு ஒரு குடும்ப க்ஷேமநலத் திட்டம்

முதல் ஐந்து வருஷத் திட்ட காலத்தில் ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு நகர்ப்புற குடும்ப க்ஷேமநலத் திட்டத்தை ஏற்படுத்துவதென மத்திய சமூக க்ஷேமநல போர்டு முடிவு செய்திருப்பதாக, ராஜ்ய சமூக க்ஷேமநல ஆலோசனை போர்டுகளின் அக்கிராசனர்கள் மகாநாட்டின் இரண்டாவது நாள் கூட்டத்தில், மத்திய சமூக க்ஷேமநல போர்டு அக்கிராசனர் ஸ்ரீமதி துர்க்காபாய் தேஷ்முக் தெரிவித்தார்.

வர்த்தக–தொழிலியல் மந்திரி காரியாலயத்துடன் கலந்தாலோசித்து மத்திய சமூக நல போர்டால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழில்துறை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக பணியாற்றப்படவிருக்கும் நகர்ப்புற குடும்ப க்ஷேமநலத் திட்டம், மத்திய சமூக நல போர்டு அக்கிராசனர், வர்த்தக–தொழிலியல் மந்திரி காரியாலயத்தினர் ஆகியவர்களுக்கிடையே சமீபத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது பூர்த்தி செய்யப்பட்டது. அத்தகைய ஒவ்வொரு திட்டத்துக்கும் வர்த்தக–தொழிலியல் மந்திரி காரியாலயம் நிதி மான்யம் அளித்து வரும்.

இத்திட்டத்தின்கீழ், ஆரம்பிக்கப்பட்டுள்ள தீக்குச்சித் தொழிற்சாலை ஒன்று ஏற்கெனவே புது டில்லியில் வேலை செய்து வருகிறது ; இத்தகைய திட்டங்களை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க பரிசீலனைகள், பூனு, ஹைதராபாத், விஜயவாடா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உணவு உற்பத்தி பெருக
புதிய சாகுபடிமுறை





சமுதாய நலத் திட்ட வேலைகளில்
மக்கள் பங்கு

CONNEMARA PUBLIC LIBRARY
25 FEB 1958
MADRAS







கைநுட்ப வேலைத் தொழிலாளர்கள், சிலைகள்,
வாத்தியங்கள், சங்கு வளையல்கள் முதலிய
வற்றைத் தயார்ப்பதில் ஈடுபட்
டுள்ளார்கள்.

PUBLIC LIBRARY
1958
MADRAS





25 FEB 1958
MADRAS

குடிசைத் தொழில்கள்..
பாய், கூடைகள், விரிப்புகள்
முதலியவை
தயாரிக்கப்படுகின்றன...





குன்றுச் சரிவுகளிலே

[ஸ்ரீ என்.எம். லிங்கம், சமூகக்கல்வி அமைப்பாளர், உதகமண்டலம்]

[குன்றுச் சரிவுகளிலே விவசாயம் நடக்கும் உதகமண்டல வட்டாரத்திலுள்ள கிராமங்களின் பிரச்னை களே அலாதியானவை. அவற்றைப் பற்றித் தெளிவாக எடுத்துக்கூறி, சமுதாய நலத்திட்ட அதிகாரிகள் அவற்றைத் தீர்ப்பதற்காகப் பாடுபட்டுவருவதைப் பற்றியும், இக் கட்டுரையாளர் விளக்கியிருக்கிறார்.

—ஆசிரியர்]

உதகை வட்டாரத்தைச் சேர்ந்த கிராமங்கள் மலைப்பிர தேசத்தில் இருக்கின்றன. உருளைக் கிழங்கு, காய்கறி வகைகள் போன்ற வாணிபப் பயிர்கள்தான் இங்கு பயிரிடப் படுகின்றன. காய், கறி வகைகளை உடனுக்குடன் வணிகக் களங்களுக்கு அனுப்பி, விற்காது போனால், அவை பாழாகி விடும். ஆகவே, கிராமங்களுக்கிடையேயும், பெரிய சாலை களுக்கும் வணிகக் களங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவ தற்கு, பல ரஸ்தாக்களை அமைக்கவேண்டி யிருக்கிறது. இதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டு, இதுகாறும் மொத்தம் சுமார் 33 மைல் நீளமுள்ள ரஸ்தாக்கள் இந்த வட்டாரத் தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ரஸ்தாக்கள் சம்பந்த மாக இவ் வட்டாரத்தின் தேவைகளைக் கவனித்தால், இந்த சாதனை பெரிய வெற்றி என்று கூறிவிடமுடியாது. ஏனெனில் சாதாரண ரஸ்தாக்களைச் செப்பனிடும் வேலையும், கப்பியடிக்கப்பட்ட ரஸ்தாக்களை மேலும் சீர்திருத்தவேண் டிய வேலையும், பல புதிய ரஸ்தாக்களை அமைக்கும் வேலை யும், இனிமேல்தான் செய்தாகவேண்டியிருக்கிறது.

ரஸ்தா அமைப்பு பற்றிய பிரச்னை

மலைப் பிரதேசத்தில் ரஸ்தா அமைப்பதற்கு ஆகும் செலவும், சமவெளிப் பிரதேசத்தில் அதே வேலைக்கு ஆகும் செலவைவிட எட்டு மடங்கு அதிகமாகி விடுகிறது. மலைப்பிரதேசத்தில், ரஸ்தாவைக்குறுக்கிட்டு, சிற்றோடை களும், வடிகால்களும் செல்வது சகஜம். ஆகையால், ரஸ் தாவை அமைக்கும்போது, இவைகள் மீது பாலங்களைக் கட்டவேண்டும். இவ்விதம் பாலங்களைக் கட்டி ரஸ்தா அமைத்தால், செலவு அதிக ஜாஸ்தி யாகத்தானே ஆகும்? ஆகவே, நல்ல ரஸ்தாக்களை அமைப்பதற்கு ஆகும் செல வுத் தொகையையும், சமுதாய நலத்திட்டத்தின் கீழ், போக்குவரத்து வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை யையும் ஒப்பிட்டால், ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. இவ்வித மிருந்தபோதிலும், இவ் வட்டாரத்துத் திட்ட அதிகாரிகள், இப் பிரச்னையைத் தீர்க்கப்பாடுபட்டு, அதில் ஓரளவு வெற்றியு மடைந்திருக்கி றார்கள் என்பதையும் மேலும், ரஸ்தா போக்குவரத்து வசதிகளை தேவைப்படும் அளவுக்குப் பெருக்கத் தீவிரமாக முனைந்து வருகிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

குடி தண்ணீர் வசதித் திட்டம்

குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதும், இங்கு சிக்க லான பிரச்னையாகவே விளங்கி வருகிறது. குன்றுகளின் உச்சியில் உள்ள கிராமங்களில் கிணறுகளைத் தோண்டுவ தால், ஒருவித பிரயோசனமும் ஏற்படாது. குன்றுகள் வழியாகவும், பள்ளத்தாக்குகள் வழியாகவும், பல மைல் களுக்குக் குழாய்கள் மூலமாகத் தண்ணீரைக் கொண்டு வந்து கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதி அளிக்க வேண்டி யிருக்கிறது. ஆகையால், இவ் வசதிக்கான திட் டம் சிறிதாக இருந்தாலும் கூட, செலவு மட்டும் ஆயிரக் கணக்கான ரூபாய் ஆகிவிடும். சில திட்டங்களை மட்டும்தான், இவ் வசதிக் கென்று ஒதுக்கப்பட்டுள்ள பட்ஜெட் தொகையி லிருந்து, நிறைவேற்றமுடியும். இதுகாறும், ரூ. 25,000 செலவில் 19 திட்டங்கள், இங்கு, நிறைவேற்றப் பட்டிருக்கின் றன. ஜில்லாவுக்கென்று வகுக்கப்பட்ட விரிவான திட் டத்தின்கீழ், 2 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு செலவு செய்து, 20 திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

மலைச் சரிவுகளில் விளையும் பயிர்கள்

இந்த வட்டாரத்துக்கும் சம வெளிப் பிரதேசத்துக்கு மிடையே, அனேக விஷயங்களில், வேறுபாடு உண்டு. உருளைக்கிழங்கு, காய், கறி வகைகள், தேயிலை, காப்பி, கோதுமை, சாமை, ராகி, நெல் முதலியவை இங்கு விளை யும் பயிர்களில் முக்கியமானவையாகும். ஜப்பானிய நெல் சாகுபடி முறையை இங்கு பின்பற்ற ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இங்கு, முதலில் உருளைக்கிழங்கு பயிரிடப் படுகிறது. பிறகு, அதே நிலத்தில் தானியப்பயிர்கள் சாகு படி செய்யப்படுகின்றன. விவசாயத்துறையில், இங்கு முக்கிய பிரச்னையாகக் காணப்படுவது மண்ணரிப்புதான். குன்றுச் சரிவுகளிலே நிலப்பகுதிகள் இருப்பதால், மழை காலத்தில், நில மண்ணை, நீர் அடித்துக்கொண்டு சென்று விடுகிறது. வரப்புக் கட்டுதல் மூலமாகவும் மரச் செடிகளை வளர்ப்பதன் மூலமாகவும், இவ்வாறு ஏற்படும் மண்ணரிப் பைத் தவிர்க்க முயன்றும், பலனளிக்கவில்லை. இப்பிரச் னையைத் தீர்க்க, நிலத்தைப் பண்படுத்தி படிமட்டம் செய் வதுதான் சாலவும் சிறந்த வழியாகும். இதற்கு ஒரு ஏக்கருக்கு 1,000 ரூபாய் செலவு ஆகும்.

உர உபயோகத்தால் கிட்டும் பலன்கள்

நிலத்தைப் படி மட்டம் செய்ய, விவசாயிகளுக்கு ஊக்க மளிப்பதற்காக, அரசினரால் கடன் அளிக்கப்படுகிறது. இது வரை, இக்காரியத்துக்காக, அரசினர், சுமார் 1,20,000 ரூபாய் கடனாக வழங்கியிருக்கிறார்கள். நில மண்ணின் சத்தையும், செழிப்புத் தன்மையையும் பாதுகாப்பதற்காக, தொழு உரம், கம்போஸ்ட் உரம், முதலியவைகளை உபயோகிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உர உபயோகத்தால் கிட்டும் பலனை விவசாயிகள் நன்குணர்ந்து, கம்போஸ்ட் உர உற்பத்தியைப் பெருக்குவதில் முனைந்துள்ளார்கள். 73,222 மணங்கு கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டு, நிலங்களில் இடப்பட்டிருக்கிறது. பசுந்தாளுரச் செடிகளும் பயிரிடப்படுகின்றன. இந்த உரம் நில வளத்தைப் பெருக்கக்கூடிய தாகும். கால்வாய்களில், சில இடங்களில், வண்டல் படியச் செய்து, அந்த வண்டலை, மண்ணரிப்பால் பாதிக்கப்பட்ட நிலப் பகுதிகளுக்கு விநியோகிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சமுதாயக் காடுகளின் உபயோகம்

முன் காலத்தில், நமது கிராமங்களுக் கருகில், சமுதாயக் காடுகள் இருக்கும். கிராம மக்கள், கட்டிடங்கள் கட்டுவதற்கும் வீட்டு உபயோகத்துக்கும், அக்காடுகளிலிருந்து, மரக் கட்டைகளை வெட்டி எடுத்துக்கொள்வது வழக்கமாயிருந்தது. அது மட்டுமல்ல, மரச் சாமான்கள் செய்வதற்குத் தேவைப்படும் மரக்கட்டைகளையும் அக்காடுகளிலிருந்தே, அவர்கள் வெட்டி எடுத்து வந்தனர். அக்காடுகள் மூலம் கிடைக்கும் பொது வருவாயிலிருந்து, கிராமக் கோயில்களைச் செப்பனிடும் வேலை நடைபெற்று வந்தது. மேலும், பல விழாக்களைக் கொண்டாடுவதற்கும் அந் நிதி பயன் படுத்தப்பட்டது.

வனமஹோத்ஸவம்

இப்போதோ அம்மாதிரியான காடுகள் மறைந்துபோய் பசுமை படர்ந்த குன்றுச் சரிவுகளெல்லாம், கட்டாந்தரைப் பிரதேசங்களாகக் காட்சி அளிக்கின்றன. காடுகள் அழிக்கப்பட்டதால், மீண்டும் அவைகளை உண்டாக்க, மரங்களை வளர்க்கவேண்டு மென்பது மக்கள் மனதில் நன்றாகப் பதிந்துவிட்டது. ஆகவே, இங்கு, ஒவ்வொரு வருடமும், வன மஹோத்சவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. 132,500 மரக் கன்றுகள் நடப்பட்டன. ஒவ்வொரு கிராமத்துக் கருகிலும், கிராம மக்களுக்குத் தேவைப்படும் விறகுக்காக, சர்க்கார் நிலங்களில், மரங்கள் வளர்ப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். சாலையோரங்களில் மரங்கள் நடுவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

சிறந்த நாடகங்களுக்குப் பரிசு

பழங்காலந்தொட்டு நாம் கடைப்பிடித்து வரும் நல்ல பழக்க வழக்கங்களும் பண்பாடும், மேறகத்திய நாகரிகத்தைப் பின்பற்றுவதன் காரணமாக, மறைந்து வருகின்றன. மேல் நாட்டாரைப் போல், நடிப்பதும் வேஷம் போடுவதும் நமது பண்பாட்டைக் கெடுத்துவிடுவதோடு, நல்ல ஒழுக்கத்தின் தரத்தையும் குறைத்துவிடும். ஆகவே, சங்கீத வாத்தியங்களை விநியோகித்து, பஜனைசங்கங்களையும், நாட்டு நடனங்களையும் புனருத்தாரணம் செய்து வருகிறோம். நல்ல நாடகங்களை நடத்த உற்சாகமளிப்பதற்காக, பரிசுகளும் வழங்கப்பட்டுவருகின்றன. இம் மாதிரியாக, 12 சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

முப்பது கிராமங்களில் நூல் நிலையங்கள்

அறிவுச் சுடரைத் தூண்டி, மக்கள் மனதில் பல புதிய கருத்துக்களையும் எண்ணங்களையும் எழுப்ப, சுமார் 30 கிராமங்களில், வாசகசாலைகளும் நூல் நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. 2,000 புத்தகங்கள் கொண்ட ஒரு மத்திய நூல் நிலையமும் அமைக்கப்பட்டிருக்கிறது. வருடாவருடம், 300 புத்தகங்கள் வீதம் இந் நூல் நிலையத்தில், அதிகப்படியாக புத்தகங்கள் சேர்க்கப் படுகின்றன. மத்திய நூல் நிலையத்திலிருந்து, கிராம நூல் நிலையங்களுக்குப் புத்தகங்கள் அனுப்பப்படுகின்றன. கிராமத்தலைவரும் கிராமத்திலுள்ள ஆசிரியர்களும் நூல் நிலையங்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தாங்களாகவே முன் வந்துள்ளார்கள். இந்த அணு யுகத்திலே, மக்களிடையே கல்வியைப் பரப்புவதற்குச் சிறந்த சாதனமாக விளங்குவது ரேடியோவாகும். இது வரை, சுமார் 12 சமுதாய ரேடியோ செட்டுகள் இவ் வட்டாரத்திலுள்ள கிராமங்களில் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இச் செட்டுகளை நிர்மாணிக்க, மக்கள் பாதிச் செலவை ஏற்றுக்கொண்டதுடன், வாடகையில்லாமல் கட்டிடங்களையும் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள்.

மக்கள், ஓய்வு நேரங்களை, சிறந்தவகையில் பயன் படுத்திக் கொள்ள இவ்வாறான வசதிகள் பல செய்து கொடுக்கப்பட்டதால், அவர்கள் இப்போதெல்லாம், ஓய்வுப் பொழுதைப் போக்க, நகரங்களுக்குச் செல்வதில்லை. இதனால், நகரங்களில் அவர்கள் செலவு செய்த பணம், இப்போது கிராமங்களில் புழங்குகிறது.

கிராம மாதர்கள் காட்டும் ஆர்வம்

கிராமங்களில் உள்ள மாதர்களோ, இப்போது, பொது நலப்பணியில் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும், தாய், சேய் நல விடுதிகளும் வைத்திய சாலைகளும் அமைக்கப்பட வேண்டுமென அவர்கள் கோருகிறார்கள். இவைகளை நடத்த, பயிற்சி பெற்ற வைத்தியர்கள் வேண்டுமே ; அவர்களுக்கு யார் சம்பளம் கொடுப்பது என்று கேட்டால், அவர்கள் தாங்களே சந்தா வசூலித்து சம்பளச் செலவை ஈடு கட்டுவதாகக் கூறுகிறார்கள் ! இதிலிருந்து, மாதர்கள் அபிவிருத்தித் திட்டங்கள் மீது காட்டும் ஆர்வம் எத்தகையது என்பது புலனாகும். அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் மனதைக் கவர்ந்திருக்கின்றன ; அவை மக்களைப்

பொது நலனுக்காக உழைக்கவும் தியாகம் செய்யவும் தூண்டிவருகின்றன; திட்டங்களால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருகிறது.

பிரசவ மருத்துவ உதவி

இவ்வட்டாரத்திலுள்ள பிரசவ மருத்துவசாலைகளிலும், வைத்திய சாலைகளிலும் தொண்டு புரியும் பிரசவமருத்துவ மாதர்கள் தகுந்த யோசனைகளைக் காலாகாலத்தில் கர்ப்பிணிகளுக்கு அளித்து வந்ததன் பயனாக குழந்தைகளின் அகால மரணங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. நகரத்துக்குச் சென்று பணம் செலவு செய்து வைத்திய சிகிச்சை பெறுவதற்குப் பதிலாக, கிராம மக்கள் கிராமங்களிலேயே சிகிச்சை பெறுகிறார்கள். இந்த ஆண்டில், மேற்கொண்டு ஓரிரண்டு வைத்தியசாலைகளையும் நான்கு பிரசவ விடுதிகளையும் ஆரம்பித்து நடத்த ஏற்பாடாகியிருக்கிறது.

மக்களின் மனமாறுதல்

இவ்வாறாக வசதிகள் பல கிராமங்களிலேயே கிடைக்க ஏற்பாடு செய்யப்படுவதால், மக்கள் அரசினரைப் பாராட்டுகிறார்கள். அவர்கள் பயந்து கொண்டே எதிர்பார்த்திருந்த இருள் சூழ்ந்த எதிர்காலம் மறைந்து வருவதையறிந்து, அவர்கள் மன மகிழ்கிறார்கள். எக்காரியத்தையும் அரசினர்தான் செய்தாகவேண்டும் என்ற தப்பபிப்பிராயமும் மறைந்து வருகிறது. ஆரம்ப கட்டத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக, மக்களிடமிருந்து பங்கு கேட்டபோது, அவர்கள், அரசினர் இவ்வாறு மக்களிடம் யாசகம் கேட்பதற்குப்பதிலாக, நிறையக் கரன்சிநோட்டுகளை அச்சடித்து, அபிவிருத்தி வேலைகளுக்காகச் செலவு செய்யலாமே என்ற விபரீத யோசனையைக் கூறினார்கள். இப்பொழுதோ, அவர்களேவலியவந்து, மனமகிழ்வுடன், தங்கள் பங்கை அளிக்கிறார்கள்.

திட்ட அதிகாரிகள் மக்களின் வழிகாட்டிகள்

வட்டார அபிவிருத்தி அதிகாரி முதல் கிராம சேவக்வரை, அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க ஊழியர்கள் அனைவரும், அபிவிருத்தித் திட்ட வேலைகளை உருவாக்கி நிறைவேற்றிவரும் சிற்பிகளாக விளங்கி வருகிறார்கள். அவர்கள், வித்தியாச வேறுபாடு எதுவுமின்றி மக்களுடன் சௌஜன்யமாய் பழகுகிறார்கள். ‘அதிகார தோரணை’ என்ற இரும்புத்திரை அறவே அகற்றப் பட்டுவிட்டது. தாங்களே விளக்குமாறை எடுத்துச் சென்று துப்புரவு வேலையைச்செய்வதன் மூலமாகவும், ரஸ்தாக்களைச் செப்பனிடுவதன் மூலமாகவும் கம்போஸ்ட் உரத்தைத்தயார் செய்வதன் மூலமாகவும், மக்களுக்கு வழிகாட்டிகளாய் விளங்குகிறார்கள். பொது விருந்து நடக்கும் போது, பாயின் மீது, மக்களுடன் சேர்ந்து உட்கார்ந்து உணவை உட்கொள்கிறார்கள். வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் கிராம சேவக்குகள் முதலானோர் கிராமந்தோறும், கோஷ்டி கோஷ்டியாகச்சென்று மக்களுக்கு அபிவிருத்தி வேலைகளைப் பற்றி எடுத்துச்சொல்வதுண்டு. அவர்கள் எளிய வாழ்க்கை நடத்துகிறார்கள். இவ்வாறாக அவர்கள், கிராம மக்களின் நண்பர்களாகவும், ஆலோசகர்களாகவும், வழிகாட்டிகளாகவும் விளங்கி வருவதால், சர்க்கார் அதிகாரிகளெல்லாம் இரத்தத்தை உறிஞ்சும் வரி வசூல் செய்யும் உத்தியோகஸ்தர்கள் என்று மக்கள் மனதிலே முன்பெல்லாம் பதிந்திருந்த எண்ணம் இப்போது மறைந்து விட்டது.

ராமநாதபுரம் ஜில்லாவில்

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில், 1955-ம் வருஷம் நவம்பரில் மூன்று முதியோர் கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டன. ராஜபாளையம் வட்டாரத்திலும் மூன்று முதியோர் கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், நான்கு மக்கள் மனமகிழ் மன்றங்களும் ஆரம்பிக்கப்பட்டன. சிவகாசி வட்டாரத்தில் வீடு கட்டும் சங்கங்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீவில்லிப்புத்தூர், சிவகாசி, ராஜபாளையம், வட்டாரங்களில், 369 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டன. 1,504 கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்டது. ஸ்ரீவில்லிப்புத்தூர், சிவகாசி வட்டாரங்களில் 50 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன.

செங்கல்பட்டு ஜில்லாவில்

மணமை கிராமத்தில், 22-11-55 யன்று, கால்நடைக் கண்காட்சி நடத்தப்பட்டது. சிறந்த பிராணிகளுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த ஜில்லாவிலுள்ள திட்ட வட்டாரங்களில் நவம்பர் மாதத்தில் மொத்தம் 4 கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டன. கடம்பத்தூர் வட்டாரத்தில், அகில இந்திய கூட்டுறவு வாரம் கொண்டாடப்பட்டது. இந்த ஜில்லாவில், 8 முதியோர் பள்ளிகள் 1955 நவம்பரில், புதிதாக ஆரம்பிக்கப்பட்டன; இரு சமூகக் கல்வி நிலையங்களும் துவக்கப்பட்டன. கிராமவாசிகளுக்குரிய வீடுகள் 73 கட்டி முடிக்கப்பட்டன. நான்கு வீடுகள் புதுப்பிக்கப்பட்டன. சமுதாய நலத்திட்ட நிர்வாகத் தலைவர் ஸ்ரீ எஸ். கே. டே, 17-11-55 யன்று, திருக்கழுக்குன்றம் வட்டாரத்துக்கு விஜயம் செய்தார். பிறகு, கடம்பத்தூர், திருவள்ளூர், ஊத்துக்கோட்டை வட்டாரங்களுக்கும் அவர் சென்றார். உளுந்தை கிராமத்தில், அவர் ரஸ்தா அமைக்கும் வேலையைத் துவக்கி வைத்தார். பாக்கம் கிராமத்தில், பிரசவ விடுதிக்கு முன்பாக, அவர், தென்னங்கன்று ஒன்றை நட்டார். விஷ்ணுவாக்கம் ஈக்காடு கிராமங்களில் அவர் சிறுவர் பூங்காக்களைத் திறந்து வைத்ததுடன், ஈக்காடு கிராமத்தில் ஒரு மாதர் சங்கத்தையும் ஆரம்பித்து வைத்தார். தையல் வேலை, நூல் நூற்பு, கல்வி போதிக்க பாட வகுப்புகள் நடத்துதல், முதலியவைகளை நடத்தி கிராம மாதர் முன்னேற்றத்துக்குப் பாடுபடும்படியாக அவர், மாதர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

சமுதாய அபிவிருத்தித் திட்ட ஊழியர்கள்

[சமுதாய அபிவிருத்தித் திட்ட நிறைவேற்றத்துக்கு உருவாக்கப்பட்ட பொறுப்பான நிர்வாக அமைப்பின் கீழ் கிராம சேவக்குகள், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், வளர்ச்சித்திட்ட அதிகாரிகள் முதலியோர் எந்தெந்த சேவைகளைப் புரிந்து வருகிறார்கள் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

—ஆசிரியர்]

சென்ற மூன்றுவருஷங்களுக்கு மேலாகவே இந்தியாவில் நிறைவேற்றி வைக்கப்பட்டு வரும் சமுதாய அபிவிருத்தித் திட்டம் முக்கியமாக மக்களின் திட்டமேயாகும். ஆரம்ப முதலே, முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உருவகப் படுத்தப்பட்டபடி சமுதாய நலத் திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் காரியம் லேசானதல்லவென்றும், இதில் ஈடுபடுவதற்கு, குறிப்பிட்ட பணிகளை ஆற்றுவதற்காக பயிற்சி பெற்ற சேவையாளர்கள் அவசியமென்றும், இவர்கள் பயிற்சி பெற்றிருப்பது மட்டும் போதாதென்றும், ஆனால் திட்டத்தின் அடிப்படை தத்துவத்தை உணர்ந்து அதன்படி நடக்கக்கூடிய மனமாறுதல் படைத்தவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதும் உணரப்பட்டிருந்தது. அதோடு, திட்டத்தின் மற்றொரு ஜீவாம்சம் என்னவென்றால், இதை நிறைவேற்றி வைப்பவர்கள் வெறும் சாதனைகளைக் காட்டுபவர்களாகமட்டு மிருக்கக்கூடாது. மக்களின் மனத்தை மாற்றக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டுமென்பது தான். இவர்கள் மக்களிடையே நல்வாழ்வு வாழவேண்டு மென்ற ஆவலை உண்டாக்கக் கூடியவர்களாக இருப்பதுடன், இந்த லட்சியத்தை அடைவதற்குச் சிறந்த வழி சுய முயற்சிதான் என்று அவர்கள் உணரும்படி செய்யக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். ஆகையினால் சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்கள், தேசிய வளர்ச்சித்திட்ட வட்டாரங்கள் ஆகியவற்றில் பணியாற்றுவதற்கு மக்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தச் சேவையாளர்கள் வேலை தொடங்கியதுடன், அன்றுடம் திட்ட நிறைவேற்றத்துக்குப் பொறுப்பான நிர்வாக அமைப்பு ஒன்றும் உருப்பெற்றது.

இந்த அமைப்பின் அடிப்படையில் கிராம அந்தஸ்து சேவையாளர் இருந்து வருகிறார்; அமைப்பின் பலம் முழுவதும் இவரைச் சார்ந்தே இருக்கிறது. தமது பொறுப்பிலுள்ள கிராமங்கள் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை கிரியாம்சத்தில் நடத்தி வைப்பதற்குப் பொறுப்பானவரும்கிராம அந்தஸ்து சேவையாளர்தான்; மற்றும், கிராம மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளவர் என்ற ஹோதாவிலும் திட்டத்தின் முக்கியத்துவத்தை மக்கள் உணரும்படி செய்து, இதன் நிறைவேற்றத்தில் முக்கிய பங்கை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்யக் கூடியவரும் இவர்தான்.

கிராம அந்தஸ்து சேவையாளர் பல-காரியத் தொண்டர். இவர்தான் கிராம மக்களுக்கு விவசாயம், கல்வி, பொது சுகாதாரம், கால்நடைகள் வைத்திய உதவி, கூட்டுறவு, குடியிருப்பு வசதி, வளர்ச்சித்திட்ட முறைகள் ஆகிய பல துறைகளிலும், ஏன், கிராம மக்கள் தங்கள் வேலையைச் செய்வதில் எழும் பல பிரச்னைகளைப்பற்றியும் ஆலோசனை கூறுபவராக இருக்கிறார். பரஸ்பரம் நம்பிக்கையுள்ள ரீதியான உறவை இவர்களுடன் அவர் அபிவிருத்தி செய்துகொள்ளவேண்டும். திறம்பட வேலைகள் நடப்பதை முன்னிட்டு யாருக்காக இவர் உழைக்கிறாரோ, யாருடன் சேர்ந்து சேவை செய்து வருகிறாரோ அவர்களுடன் தன்னையும் ஒருமைப்படுத்திக் கொள்ளவேண்டும்; ஆனால் அதே சமயத்தில் இப்படிச் செய்வதில் தனது காரியங்கள் அங்கீகரிக்கப்பட்ட கிராமத் தலைமையின் துறையோடு மோதாதபடியும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

கிராம அந்தஸ்து சேவையாளருக்கு விசேஷப் பயிற்சி கொடுக்கப்படவேண்டியது அவசியமாக இருந்தமையால் பரந்த வகையில் அதிகமான பிரதேசங்களில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைப்பது முதலில் கஷ்டமாக இருந்தது. ஆனால் இப்பொழுது பல பயிற்சி ஸ்தாபனங்களிருப்பதாலும், ஏற்கெனவே இத் துறையில் கிராம அந்தஸ்து சேவையாளர் சுமார்கள் 10,000 பேர்கள் தொண்டாற்றி வருவதாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுமாதிரி சேவையாளர்களுக்கு அதிகம் தேவையாயிருக்குமாகையால் இவர்களைத் தயாரிப்பதற்கான காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பல ஸ்தாபனங்களிலுமாக வருஷத்துக்குக் கிராம அந்தஸ்து சேவையாளர்கள் சுமார் 8,000 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்து அனுப்ப முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமங்களில் மாதர்களின் விசேஷ தேவைகளைத் தீர்த்து வைப்பதற்காக ஸ்திரி கிராம அந்தஸ்து சேவையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக சில பயிற்சி நிலையங்களில் விசேஷப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் நிறைவேற்றத்துக்காகத் தேவைப்படும் மற்றொரு வகை சேவையாளர் சமூகக் கல்வி அமைப்பாளராகும்; இவரது வேலை, மக்கள்

அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தை உணரும்படி செய்வதாகும். இதற்காகத் தன் பொறுப்பில் உள்ள கிராமங்களில் இவர் பலவித மான காரியங்களைச் செய்யவேண்டியதிருக்கிறது. இதில் கல்வி, எழுதப்படிக்கச் செய்வதற்கான திட்டங்கள், கலாச் சார, பொழுதுபோக்கு நடவடிக்கைகள், தகவல் அறி விப்புப் பிரசுரங்கள் விநியோகித்தல், மாதர், சிசு, இளைஞர் நல வேலைகள் முதலியன சேர்ந்திருக்கின்றன.

ஆண், பெண் சமூக அமைப்பாளர்களுக்கு பயிற்சி அளிப் பதற்காக இப்பொழுது ஐந்து நிலையங்கள் உள்ளன ; மேலும் இரண்டு நிறுவப்படும். ஒவ்வொரு 50 கிராமங் களின் தேவைகளைக் கவனித்து வரும் சமூகக் கல்வி அமைப் பாளர்கள் இப்பொழுது சுமார் 2,000 பேர்கள் இருக்கின் றனர்.

உயர்ந்த அந்தஸ்தில், கிராம அந்தஸ்து சேவையாள ருக்கும், சமூகக் கல்வி அமைப்பாளருக்கும் " மூத்த சகோ தரன் " போல் வட்டார அபிவிருத்தி அதிகாரி இருக்கிறார். இவர் 100 கிராமங்கள் கொண்ட அபிவிருத்தி வட்டாரத் துக்குப் பொறுப்பாளராக இருந்து வருகிறார் : வாஸ்தவத் தில் இவர்தான் கிராமத்தையும் ராஜ்ய சர்க்காரையும், கிராமத்தையும் திட்ட அதிகாரிகளையும் இணைக்கும் அம்ச மாக இருந்துவருகிறார். இப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளை மேற்பார்வையிடும் பொறுப்பு இவரைச் சார்ந்த தாகும். இந்த சிப்பந்திகள் தவிர, திட்டத்தை நிறை வேற்றி வைப்பதில் குறிப்பிட்ட விஷயங்களில் விசேஷ ஞானத்தை கிராம மக்களுக்குக் கொடுத்து உதவி செய் வதற்காக பலதுறை நிபுணர்கள் வேறு இருக்கின்றனர். இவர்கள்தான் கால்நடை வைத்தியர்கள், சுகாதார இன்ஸ்பெக்டர்கள், டாக்டர்கள், ஸ்திரி சுகாதார பார்வை யாளர்கள், மருத்துவ மாதர்கள், பல—காரிய ஓவர்சீயர்கள், பஞ்சாயத்து இன்ஸ்பெக்டர்கள் முதலானோர்.

திட்டத்துக்குத் தகுந்த சிப்பந்திகளை ஏற்பாடு செய்வ தில் ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால், இவற் றுக்காகத் தெரிந்தெடுக்கப்படுபவர்கள் இவற்றின் நிறை வேற்றத்தில் உண்மையான ஆவலும், நாட்டமும் கொண்ட வர்களாக இருக்கும்படி பார்த்துக்கொள்வதேவையாகும். இவ்வித மனப்போக்கையும், நாட்டத்தையும் ஊட்டி வளர்ப்பதற்காக இவர்களுக்குப் பயிற்சி நிலையங்களில் தக்க பயிற்சி அளிக்கப்படுவதுடன், சமுதாய நலத்திட்ட நிர்வாகத்தினர் ராஜ்ய திட்ட, பிராந்திய அந்தஸ்துகளில் தொடர்ச்சியாகப் பல விவாத அரங்குகள் நடைபெறுவ தற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர் ; இவற்றில் திட்ட வேலை களில் ஈடுபட்டுள்ள கிராம அந்தஸ்து சேவையாளர் உட் பட உயர்தர அதிகாரிகள் யாவரும் தாராளமாகக் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கிறது. விவாதங்கள் மூலம் புதிய பிரச்னைகள் தோன்றுகின்றன. பரஸ்பர அனுபவங் களின் மூலம் இவ்வதிகாரிகள் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகின்றனர் ; ஒரு அதிகாரி இந்தியாவின் ஒரு மூலையில் ஒரு தொகுதி கிராமத்தில் பணியாற்றி வந்த போதிலும், இவ் விவாத அரங்குகளின் மூலம் இவர்களிடையே ஓர்விதத் தோழமை நட்பு வளர வழி யேற்படுகிறது. இந்த விவாத அரங்குகளில் உத்தியோகச் சார்பற்றவர்கள் கலந்துகொள்ளவும் அனுமதிக்கப்படு கிறார்கள் ; உண்மையில் சில விவாத அரங்குகளின் வெற் றிக்கு இவ்வித உத்தியோகச் சார்பற்றவர்களின் சேவை பெரிதும் உதவியாக இருந்தது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சமுதாய அபிவிருத்தி வேலைகளுக்குப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் அதிகமாகத் தேவைப்படும் : மொத்தம் 349,000 பேர்கள் தேவைப்படலாம் என்று இப்பொழுது மதிப்பிடப்பட்டிருக் கிறது.

ஆத்தூர் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலுள்ள கொண்டையம்பள்ளியில், 1955-ம் ஆண்டு டிசம்பர்மீ-த்தில் பஞ்சாயத்து அமைக்கப் பட்டது. 126 ஏக்கர் நிலத்தில், ஜப்பானிய நெல் சாகுபடி முறை பின்பற்றப்பட்டது. விதைகள், உரம், காளைகள் முதலியவைகள் வாங்குவதற்காகவும், வீடுகளைக் கட்டுவதற் காகவும், கிணறு தோண்டுவதற்காகவும், மக்களுக்கு, மொத்தம் 9,530 ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டது. மொத்தம் 810 பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. புதிய ஆரம்ப பாடசாலை ஒன்றும், மாதர் சங்கங்கள் நான்கும், சமூகக் கல்வி நிலையங்கள் நான்கும், மக்கள் மனமகிழ் மன்றங்கள் மூன்றும், இவ்வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டன. சிறுவர் பூங்கா ஒன்று திறக்கப் பட்டது.

கிருஷ்ணகிரி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்தில், 1955-ம் ஆண்டு டிசம்பர்மீ-த்தில், 390 மரங்கள் நடப்பட்டன. 181 பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சையும், 183 நோயுற்ற பிராணிகளுக்கு வைத்திய சிகிச்சையும் அளிக்கப்பட்டன. 1 மைல் 2 பர்லாங்கு நீளத்துக்கு, புதிய ரஸ்தா ஒன்று அமைக்கப் பட்டது. 4 கிணறுகள் தோண்டப்பட்டன. 2 முதியோர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1955-ம் ஆண்டு டிசம்பர்மீ 11உ-யில், அமைச்சர் ஸ்ரீ பி. பரமேஸ்வரனால், செய்தி அறிவிப்பு நிலையம் திறக்கப்பட்டது, தாய்-சேய் நலனுக்காக 275 பேர்களுக்கு பிரசவ மருத்துவ உதவியாளர்கள் சிகிச்சை அளித்தனர்.

பெத்தநாய்க்கன்பாளையம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலுள்ள ஏழு கிராமங்களிலே, 1955-ம் டிசம்பர்மீ-த்தில், புதிய பஞ்சாயத்துக்கள் அமைக் கப்பட்டன. 3 முதியோர் பள்ளிகளும், 2 சமூகக் கல்வி நிலையங்களும், 3 சிறுவர் பூங்காக்களும், 4 நூல் நிலையங் களும் ஒரு மாதர் சங்கமும், 5 புதிய பள்ளிகளும், 1955-ம் ஆண்டு டிசம்பர்மீ-த்தில் அமைக்கப்பட்டன. நான்கு பிரசவ மருத்துவ விடுதிகள் இவ்வட்டாரத்திலுள்ள மக்களுக்குச் சேவை புரிந்து வருகின்றன.

செய்தித் திரட்டு

திருவண்ணாமலை வட்டாரத்தில்

இவ்வட்டாரத்தில், 1955 டிசம்பரில், 5 புது கிணறு வேலைகளும், மற்றும் 5 கிணறுகளைச் செப்பனிடும் வேலையும் துவக்கப்பட்டு, நடந்தேறி வருகின்றன. மூன்று ரஸ்தா வேலைகள் பூர்த்தியாகும் கட்டத்தை அடைந்திருக்கின்றன. மீன் வளத்தைப் பெருக்க, 500 மீன் குஞ்சுகள், நீர் நிலைகளில் விடப்பட்டுள்ளன. மல்லவாடியில், கிராம வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் ஒன்றும், ஆவூரில், பாய் பின்னும் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் ஒன்றும், மேக்களூரில், மாணவர் கூட்டுறவு சங்கம் ஒன்றும், கீழ்பென்னத்தூரில் வாழ்க்கைத் தர உயர்வுக்காக ஒரு கூட்டுறவு சங்கமும், இவ்வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டன. புதிய பள்ளிகள் நான்கைக் கட்டுவதற்கு, வேலைகள் துவக்கப்பட்டன. 306 ரூபாய்க்குக் கதர் உண்டியல்கள் விற்கப்பட்டன. மல்லவாடியில் பிரசவ மருத்துவ விடுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

கீ. வை. குப்பம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலுள்ள, மேல்மாயில், கீ. வை. குப்பம், வேலம்பட்டு, பசுமத்தூர், ஆகிய கிராமங்களில் சமூகக் கல்வி நிலையங்கள், 1955 டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டன.

மண்டகொளத்தூர் வட்டாரத்தில்

கதர் நூல் நூற்புப்போட்டி ஒன்று, 11-12-55-ல், போளூரில் நடத்தப்பட்டது. போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 25 ரூபாய் பெறுமான பரிசுகள் வழங்கப்பட்டன.

வள்ளியூர் வட்டாரத்தில்

சமீபத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வள்ளியூர் வட்டாரத்திலே, சங்கமாபுரத்திலிருந்து குமரிமுனை ரஸ்தாவுக்கு, சாலை அமைக்கும் வேலையை, 1955 டிசம்பர் 2-ந் தேதியன்று, கிராம நல துணை டைரக்டர் ஆரம்பித்து வைத்தார்.

ஆலங்குடி வட்டாரத்தில்

ஆலங்குடி வட்டாரம், சமீபத்தில் அடித்த புயலால் பாதிக்கப்பட்டிருப்பதால், அங்கு அபிவிருத்தி வேலைகள் கணிசமாக முன்னேறவில்லை. எனினும், சாதாரண ரஸ்தாக்கள், மொத்தம் 4 பர்லாங்கு நீளத்துக்கு, 1955 டிசம்பரில் இவ் வட்டாரத்தில் போடப்பட்டன. 22 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 477 மணங்கு உரமும், 33 மணங்கு விதைகளும் விநியோகிக்கப்பட்டன. மேலும் 4 ஏக்கர் நிலத்தில் கனிமர வளர்ப்பும், இரண்டு ஏக்கர் நிலத்தில் காய்கறித் தோட்ட சாகுபடியும் நடைபெற்றுவருவதுடன், 85 ஏக்கர் நிலத்தில், ஜப்பானிய நெல் சாகுபடி முறையும் பின்பற்றப்பட்டு வருகிறது. 132 பிராணிகளுக்கு நோய்தடுப்பு ஊசி போடப்பட்டது. வாகவாசல் கிராமத்திலும், மணவிடுதி கிராமத்திலும் பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டன. வீடு கட்டுவதற்காக கிராம மக்களுக்கு 1,000 ரூபாய் கடனாக வழங்கப்பட்டது.

கரூர் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்தில், கிராம குடிதண்ணீர் வசதிக்காக, 1955 டிசம்பரில், சமுதாய நலத் திட்டத்தின்கீழ், 4 கிணறு அமைப்பு வேலைகள் பூர்த்தியாயின. 782 மரக் கன்றுகள் நடப்பட்டன. புன்னம் சத்திரம், சூடாமணி, ஊத்துப் பட்டி முதலிய கிராமங்களில், மொத்தம் 443 பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை செய்யப்பட்டது. நடுப் பாளையத்தில், பள்ளிக்கூடக் கட்டிடவேலை அநேகமாக பூர்த்தியடைந்துவிட்டது.

பெரம்பலூர் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்தில், கொளுஞ்சி, தக்கைப் பூண்டு, சீமை அகத்தி முதலிய பசுந்தாளுரச் செடிகள், 40 ஏக்கரில் நடப்பட்டன. 1955 டிசம்பரில், இவ் வட்டாரத்தில், 267 பிராணிகளுக்கு நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. மலையாள பட்டியில், பலகாரிய கூட்டுறவு சங்கம் ஒன்றும், அரும்பாவூரில், ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கென, ஊழியர் கூட்டுறவு சங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டன. அரும்பாவூரில், அகில இந்திய சமூகக் கல்வி தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நெய்குப்பையில், கதர் நூல் நூற்புப் போட்டி ஒன்று, 29-12-55-ல் நடத்தப்பட்டு, பரிசுகளும் வழங்கப்பட்டன. குடிதண்ணீர் வசதி வேலைகள் ஐந்து பூர்த்தி செய்யப்பட்டன.

முசிரி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்தில், 1955 டிசம்பரில் 5 பள்ளிக்கூடக் கட்டிட வேலைகள் பூர்த்தியாயின. ஆமூர், வீராமணிப் பட்டி, முசிரி முதலிய ஊர்களில், தொழுவங்கள் கட்ட ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. 19 கம்போஸ்ட் உரக் குழிகள் தோண்டப்பட்டு, 37 டன் உரம் தயாரிக்கப் பட்டது. 53 டன் அம்மோனியம் சல்பேட் உரமும் $\frac{1}{2}$ டன் சூபர் பாஸ்பேட் உரமும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அத்துடன், தேனீ வளர்ப்புக்குரிய 18 பெட்டிகளும், மக்களுக்கு பாதி விலையில் விற்கப்பட்டன. மக்கள் ஸ்தாபனங்கள் 2-ம், மக்கள் மனமகிழ் மன்றம் ஒன்றும், மாதர்

சங்கம் ஒன்றும், சமூகக் கல்வி நிலையம் ஒன்றும், இவ் வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டன. முதியோர் பள்ளிகள் 2-ம் ஆரம்பிக்கப்பட்டன. மாதர் நல நிலையமொன்று கரட்டாம் பட்டியில் ஆரம்பிக்கப்பட்டது. 300 பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது.

பாபநாசம் (தெற்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1955 டிசம்பரில் 1,578 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. 6 சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஐந்து பர்லாங்கு நீளமுள்ள ரஸ்தாவை, அரசினரிட மிருந்து உதவியை எதிர் பாராது, இளைஞர்களே அமைத்து விட்டனர்.

பாபநாசம் (வடக்கு) வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1955 டிசம்பரில், 20,000 ரூபாய் செலவில் அமைக்கப்படும் கெட்டித்தர ரஸ்தா வேலை பூர்த்தியாகும் கட்டத்தை அடைந்துவிட்டது. இந்த ரஸ்தா மிகவும் முக்கியமானதொரு ரஸ்தாவாகும். கொள்ளிடம் ஆற்றுக்கருகில் உள்ள கிராமங்களுக்கும், திருவையாறுக் கும், கும்பகோணம் ஜில்லா போர்டு ரஸ்தாவுக்கும், போக்குவரத்து வசதியை ஏற்படுத்தக்கூடிய இணைப்பாக, இந்த ரஸ்தா விளங்கும். 1955 டிசம்பரில், இரு சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. உமையாள்புரம் ஹரிஜன காலனியில், ஹரிஜனங்களுக்கென்றே பிரத்தியேக ஆரம்ப பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. புது வீடு களைக் கட்டவும், பழைய வீடுகளைப் புதுப்பிக்கவும், மொத்தம் 4,375 ரூபாய் கடனுகை மக்களுக்கு வழங்கப் பட்டது.

கும்பகோணம் (வடக்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1955 டிசம்பரில், குறுகிய கால கடன் வசதி அளித்து, மொத்தம் 49,700 ரூபாய் கடனுகை வும், கிராம வீடு கட்டும் திட்டத்தின்கீழ் மொத்தம் 500 ரூபாய் கடனுகவும், மக்களுக்கு வழங்கப்பட்டது. நோயுற்ற 48 கால்நடைப் பிராணிகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிக் கப்பட்டு, மொத்தம் 11,315 பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது.



ஆப்கன் அரசாங்க அதிகாரிகள், 1956 ஜனவரியில் சென்னை ராஜ்யத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தனர் சென்னையில், அவர்கள், அடிஷனல் சமுதாய அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி அவர்களுடன், கிராமத்திட்டங்கள் பற்றி விவாதித்தனர்,

கும்பகோணம் (தெற்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1955 டிசம்பரில், கூடுதலாக 5 ஏக்கர் நிலத்தில், காய்கறித் தோட்ட சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. 8,780 ஏக்கர் நிலத்தில், வரப்பு ஓரங்களில் பசுந்தாளுரச் செடிகள் நடப்பட்டன. 1,131 கால் நடைப் பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயுற்ற 328 பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. குறுகிய கால கடன் வசதி அளித்து, மொத்தம் 17,850 ரூபாயும், கிராம வீடுகட்டும் திட்டத்தின்கீழ் மொத்தம் 3,500 ரூபாயும், மக்களுக்கு கடனுக வழங்கப்பட்டது.

மாயூரம் (மேற்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1955 டிசம்பரில், 2 முதியோர் கல்வி நிலையங்களும், 2 சமூக சேவை சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டன. பரலூர், திருவாலங்காடு, கழுக்கனிமுட்டம் முதலிய கிராமங்களில், சிறுவர் பூங்காக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மாயூரம் (கிழக்கு) வட்டாரத்தில்

சென்ற மார்ச்சு மாதத்தில், நடுக்கரை கிராமத்தில், காவேரி ஆற்றுக்குக் குறுக்கே பாலம் அமைக்கும் வேலை ஆரம்பமாகி, 1955 டிசம்பரில் அவ்வேலை முடிந்துவிட்டது. இவ்வேலைக்கு சுமார் 20,000 ரூபாய் செலவு செய்யப்பட்டது.

சீர்காழி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1955 டிசம்பரில், பணக்காரன் கோட்டகம் கிராமத்திலும், ஆச்சாள்புரத்திலும், நடைபெற்றுவந்த பள்ளிக்கூடக் கட்டிடவேலையும், திருவெண்காடிலும், திருமுல்லை வாசலிலும், நடைபெற்று வந்த வைத்திய விடுதிக் கட்டிட வேலைகளும் பூர்த்தியானதுடன், குன்னம் ரஸ்தாவில் கப்பி அடிக்கும் வேலையும் பூர்த்தியாயிற்று. அத்துடன் ராதாநல்லூர் ரஸ்தாவில் கப்பி அடிக்கும் வேலையும், திருமுல்லைவாசலில் உயர்தர ஆரம்ப பாடசாலை கட்டிட வேலையும், பூர்த்தியாகிவிட்டன. தானே இயங்கும் பம்பு செட்டுகள், 5, சீர்காழி பஞ்சாயத்து பிரதேசத்தில் அமைக்கப்பட்டன. ஒரு செட்டு கன்னியா குடியில் அமைக்கப்பட்டது. சமூகக் கல்வி நிலையம் ஒன்றும், மாலைப் பள்ளிகள் ஆறும், ஆரம்பிக்கப்பட்டன. ஆலக்குடியில், பல காரிய கூட்டுறவு சங்கம் ஒன்று துவக்கப்பட்டது. மொத்தம் 1,035 பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சையும், 87 பிராணிகளுக்கு ராணிகெட் தடுப்பு ஊசிச் சிகிச்சையும், நோயுற்ற 128 பிராணிகளுக்கு வைத்திய சிகிச்சையும் அளிக்கப்பட்டன.

வேதாரணியம் வட்டாரத்தில்

சென்ற நவம்பரில் அடித்த கொடிய புயலாலும், கடல் கொந்தளிப்பாலும், இவ் வட்டாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற இயலாமல் போகவே, திட்ட அதிகாரிகள், புயல் நிவாரண சேவையில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டனர். வேதாரணியத்துக்கும் திருத்துறைப்பூண்டிக்கும் இடையே, போக்கு வரத்து வசதி பல இடங்களில் தடைப்பட்டுவிட்டது. புயல் அடித்ததால், ரஸ்தா மீது விழுந்த மரங்களை அகற்றி ரஸ்தாவைச் செப்பனிடும் வேலையிலும், திட்ட அதிகாரிகள் ஈடுபட்டனர். ரஸ்தாவில் ஏற்பட்ட உடைப்புகளை அடைக்க, 4,000 கோணிப் பைகளை விநியோகிக்க, ஏற்பாடு செய்யப்பட்டது. தோப்புத் துறையில் 10 குழாய் கிணறுகளும் அகஸ்தியம்பள்ளியில் 5 குழாய் கிணறுகளும், வேதாரணியத்தில் 10 குழாய் கிணறுகளும், உடனடியாக அமைக்கப்பட்டு, மக்களுக்கு குடி தண்ணீர் வசதி அளிக்கப்பட்டது. இக் கிணறுகள் தவிர, பெரிய குத்தகை கிராமத்தில் 5 குழாய் கிணறுகளும், புஷ்பவனம் கிராமத்தில் 7 குழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டன. கடல் கொந்தளிப்பால் குடி தண்ணீர் வசதி பாதிக்கப்பட்ட பிராந்தியங்களிலுள்ள கிராமங்களில் தான் இக் கிணறுகள் அமைக்கப்பட்டன. புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு தொத்து நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கும் பணியில், சுமார் 20 சுகாதார அதிகாரிகள் பிரத்தியேகமாக ஈடுபட்டுள்ளனர். தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ், மொத்தம் 17,915 ரூபாயும், குறுகிய கால கடன் வசதியுடன் 560 ரூபாயும், மக்களுக்குக் கடனுக வழங்கப்பட்டது. புயலுக்குப் பின், 40 மூட்டை நெல் விதையும், 5 மூட்டை எள்ளு விதையும், 2½ பவுண்டு புகையிலை விதையும், 1,200 தென்னங் கன்றுகளும், 100 சாத்துக்குடிக் கன்றுகளும், 1,500 மாங்கன்றுகளும், மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. மொத்தம் 3,924 கால் நடைப் பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், நோயுற்ற 354 பிராணிகளுக்கும் வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது. வேதாரணியத்திலும் தோப்புத் துறையிலும், புயல் நிவாரண நியாய விலைக் கடைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இக் கடைகள் மூலம், அரிசி, பருப்பு வகையருக்கள், நியாய விலைக்கு விற்கப்படும். புயலால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு கஞ்சி வார்க்க, கஞ்சித் தொட்டிகள் திறக்கப்பட்டன. வேதாரணியத்திலுள்ள இளைஞர் மன்றமும், பஞ்சாயத்து போர்டு ஊழியர்களும சேர்ந்து, 250 சவங்களை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தனர். விவசாயம், நீர்ப் பாசனம், வீடு கட்டுதல் ஆகியவற்றிற்காக, மொத்தம் 14,250 ரூபாய், மக்களுக்குக் கடனுக வழங்கப்பட்டது. அபிவிருத்தி வேலைகள் நடைபெறுவதற்காக, 1955-ம் வருடம் டிசம்பரில், மக்கள் தங்கள் பங்காக 7,050 ரூபாய் அளித்தனர்.

திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலுள்ள எழுலூர், விஸ்வநாதபுரம், ஆயமூர், செம்பிய விளாகம், வடுகூர், ஓடச்சேரி முதலிய கிராமங்களில், 1955-ம் வருடம் டிசம்பரில் கிராம மக்கள் தாங்களாகவே மொத்தம் 6 மைல் நீளத்துக்கு ரஸ்தாக்களைச் செப்பனிட்டனர். மணலி—சாத்தங்குடி ரஸ்தாவில்

கப்பி அடிக்கப்பட்டிருக்கிறது. உத்திரங்குடி நுழைவு ரஸ்தா சீர்திருத்தப்பட்டிருக்கிறது. சீரகளூர் கிராமத்தில் 3 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. 27 சேரிகள் துப்புரவு செய்யப்பட்டன. 100 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப்பட்டன. 200 மணங்கு ரசாயன உரம், 60 மணங்கு பொறுக்கு விதை, 50 நவீன விவசாய கருவிகள் முதலியவை மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. 364 பிராணிகளுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது. தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பு சிகிச்சை 776 கால் நடைப் பிராணிகளுக்கு அளிக்கப்பட்டதுடன், 3,169 பிராணிகளுக்கு சப்பை நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. மாலைப் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. விவசாய கால்நடை அபிவிருத்திக்காக 6,540 ரூபாயும் கிராமத் தொழில் வளர்ச்சிக்காக 200 ரூபாயும் தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் 900 ரூபாயும் விவசாயிகளுக்குக் கடனாக வழங்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உடனடியாக கஞ்சித் தொட்டிகளைத் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயத்தம் பாடி பிர்க்காவிலுள்ள 24 கிராமங்களில், புயலால் பாதிக்கப்பட்ட 3,625 குடும்பங்களுக்கு 59,585 ரூபாய் 1955-ம் வருடம் டிசம்பர் மீ இறுதி வரை விநியோகிக்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் 20-ல் மொத்தம் 1,850 பவுண்டு பால் பவுடர் விநியோகிக்கப்பட்டது.

மாதர் சங்கம்—மஹாராஜபுரம்

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார சமூக நலக்கல்வி அமைப்பாளர் குமாரி சீதாலட்சுமியம்மாள் முயற்சியின் பேரில் 1955-ம் வருடம் டிசம்பர் மீ 22உ ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்திலிருக்கும் மகாராஜபுரம் கிராமத்தில் 47 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு "மாதர் சங்கம்" அமைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

திருமங்கலம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலுள்ள சொரிக்கப்பட்டியில், மாதருக்கென சமூகக் கல்வி நிலையமொன்று, 1955-ம் வருடம் டிசம்பர் மீ-த்தில் ஆரம்பிக்கப்பட்டது. கூடகோயில், எஸ். மீனாட்சிபுரம் ஆகிய ஊர்களில், மக்கள் மனமகிழ் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. லாலாபுரத்திலுள்ள மாதர் சங்கத்துக்கு பாதி விலையில், தையல் மிஷின் ஒன்று கொடுக்கப்பட்டது. ஒரு பர்லாங்கு நீளத்துக்கு சாதாரண ரஸ்தாவும், மற்றும் ஒரு பர்லாங்கு நீளத்துக்குக் கெட்டித்த ரஸ்தாவும் போடப்பட்டன.



1955-ம் வருடம் நவம்பர் மீ 19உ சனிக்கிழமை, வட ஆற்காடு ஜில்லா, போளூர் தாலுகா, மண்டகொளத்தூர் வட்டாரத்திலுள்ள தேப்பநந்தல் கிராமத்தில் கோபாஸ்டமி வார கொண்டாட்டத்தின்போது கால்நடை கண்காட்சி திறப்பு விழா நடைபெற்றது. அவ் வைபவத்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள்;—

(இடது பக்கத்திலிருந்து)—1. Dr. P. M. குருவில்லா, G.M. V. C. ஜில்லா கால்நடை அதிகாரி.

2. ஸ்ரீ N. அண்ணாமலை பிள்ளை, M,L.C. 3. ஸ்ரீ M. A. மாணிக்கவேல் நாயக்கர், B. A. B. L., ரெவின்யு அமைச்சர்,

முதியோர் இலக்கியப் பண்ணை

[ஸ்ரீ. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி, M.A.L.T.]

நம் நாட்டில் கற்றவர் சிலர் ; கல்லாதவர் மிகப் பலர். கல்லாதவர் நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் எனக் கணக்கிட்டுள்ளனர். மக்கள் ஆட்சி நிலவும் நம் நாட்டில், மக்கள் அனைவரும் கல்வி கற்றவராக இருக்கவேண்டுவது அவசியம். 'இளமையிற் கல்' என்பது ஔவை வாக்கு. ஆனால் நமது நாட்டில் சூழ் நிலையின் காரணமாக இளமையிற் கல்வி பெறாதவர்கள் மிகப் பலர். நம் குடி ஆட்சி தழைக்க இவர்கள் அனைவரும் கல்வி பெறுதல் வேண்டும். முதியோர் கல்வியின் இன்றியமையாமையை இன்றைய உலகம் உணர்ந்து வருகிறது.

முதியோர் கல்வியைப் பற்றி ஆராயுங்கால் பல சிக்கல்கள் எழுகின்றன. முதியோர்கள் குடும்பத் தொல்லைகள் உடையவர்கள். அவர்களுக்கு உழைப்பு மிகுதி ; பொறுப்பும் மிகுதி. இருப்பினும், தாங்கள் கற்கவேண்டுவது தவிர்க்க முடியாதது என்பதனை அவர்கள் உணருமாறு செய்து கற்பித்தல் வேண்டும். முதியோர் பள்ளிகள், சமூகக் கல்வி நிலையங்கள் தோன்ற வேண்டும். அவர்கள் அங்கு ஓரளவு எழுத்தறிவு பெற்ற பின்பு, அவர் தம் கல்வியை வளர்த்துக் கொள்வதற்குத் தக்க நூல்கள் தேவைப் படுகின்றன. அவ்வாறு தொடர்ந்து படிப்பதற்கு நூல்கள் இல்லாவிடில் புதிதாக எழுதப் படிக்கக் கற்ற அறிவினை, பயிற்சியின்றி இழந்துவிடுவார்கள் ; மறந்து மீண்டும் பழைய நிலையை அடைந்து விடுவார்கள்.

பள்ளிகளில் பயிலும் சிறுவர்களுக்காக, எழுதப்பட்டுள்ள நூல்கள் அவர்களுக்குப் பயன் படா. முதியோர்கள் வயதால்—அனுபவத்தால் முதிர்ந்தவர்கள். அவர்கள் குழந்தையைப் போன்று ஒன்றும் அறியாத நிலையில் இல்லை. அவர்கள் அறிவு பரந்த நிலையை உடையது. ஆனால் செப்பம் செய்யப்படாதது. அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அவர்களுக்காக நூலியற்றுநர்கள். இவற்றை மனத்தில் கொள்ள வேண்டும். மேலும், அவர்கள் சூழ்நிலை, உள்ளக் கிடக்கை முதலியவற்றையும் உணர்ந்து நூலியற்றல் வேண்டும்.

தமிழ் நாட்டில் முதியோர்களுக் குரிய இலக்கியங்கள் இல்லாத காரணத்தால், முதியோர் பள்ளியில் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்ட முதியோர் கற்ற திறமையை மறந்து விடுகின்றனர். கன்னடம், உருது, இந்தி, குசராத்தி முதலிய மொழிகளில், நூற்றுக்கணக்கான நூல்கள் முதியோர்களுக்காக வெளி வந்துள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் இப் பஞ்சம் நிலவுகிறது. ஏன் ? எழுதும் திறமையுடைய எழுத்தாளர்கள் இல்லையா ?

இத்தகைய குறைபாட்டினைத் தீர்த்து, முதியோர் இலக்கியத்திற்குரிய தொடக்கங்களைப் புகட்டி, நூலியற்றும் பணியில் பயிற்சி தரும்பொருட்டுக் கோவை, பீளமேட்டின் கண் முதியோர் இலக்கியப்பண்ணை ஒன்று தோற்றுவிக்கப் பெற்றது. இதற்கு ஆங்கிலத்தில் 'லிட்டரரி வொர்க் ஷாப், (Literary work shop) என்று பெயர். அமெரிக்க மரபையொட்டி இதற்கு ஆங்கிலத்தில் இப்பெயர் இடப்பட்டது. அமெரிக்க நாடு தொழிலியலுக்குப் பெயர் பெற்றது. அவர்கள் மரபுப்படி 'லிட்டரரி வொர்க்ஷாப்' என்பது பொருந்தும். இப்பெயரை நம் மொழியில், மொழி பெயர்க்குங்கால், நாம் நம் நாட்டு மரபுப்படி மொழி பெயர்ப்பதே பொருத்த முடையதாகும். நம் நாட்டுக்கு உயிர்நாடி உழவுத்தொழில் எனக் கூறவேண்டியதில்லை. நம் நாட்டவரில் பெரும்பாலோர் பண்ணையில் உழைப்பவர்கள். இதற்கேற்ப 'லிட்டரரி வொர்க் ஷாப்' என்பது 'முதியோர் இலக்கியப் பண்ணை' என மொழி பெயர்க்கப்பட்டது.

இவ்விலக்கியப் பண்ணையினைத் தோற்றுவித்தவர் சென்னை அரசியலார் ஆவர். நம் மத்திய அரசியலாரால் இதற்குப் பண உதவி அளிக்கப்பட்டது. சென்னை மாநிலத்திற்கு, இதுவே முதலாவது இலக்கியப் பண்ணை.

1953–54-ஆம் ஆண்டில் நம் மத்திய அரசியலார் ஆதரவில், நான்கு முதியோர் இலக்கியப் பண்ணைகள் நடந்தன. அவற்றுள் தென்னிந்தியாவிற்கென ஒரு முதியோர் இலக்கியப் பண்ணை மைசூரில் அமைக்கப்பட்டது. அந்த இலக்கியப் பண்ணையில் தமிழுக்கெனத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மூன்றேபேர். இவ்வாண்டிலும், மத்திய அரசியலார், ஒவ்வொரு மொழிக்கும் தனியாக முதியோர் இலக்கியப் பண்ணைகளை நடத்த ஏற்பாடு செய்தனர். தமிழில் முதியோர்க்குரிய இலக்கியங்கள் இல்லாமையை உணர்ந்து, தமிழுக்கென ஓர் இலக்கியப் பண்ணையை அமைக்கும்படி சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொண்டனர். இதன் விளைவுதான் பீளமேட்டில் தோன்றிய முதியோர் இலக்கியப் பண்ணை.

இவ்விலக்கியப் பண்ணை இவ்வாண்டு நவம்பர் 2-ம் நாள் தொடங்கப் பெற்றது. இதை இயக்கும் பொறுப்பு நெறியாளரைச் (Director) சார்ந்தது. அந் நெறியாளராக இருந்து பணியாற்றும் பேறு எனக்குக் கிடைத்ததைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். நெறியாளருக்கு உதவியாக இணை நெறியாளர் ஒருவர் உண்டு. இவ்விலக்கியப் பண்ணையில் பயிற்சி பெற்றவர்கள் இருபதுபேர். இவர்களுள் இருவர் பெண்டிர்.

மத்திய அரசியலார் திட்டத்தின்படி முதியோர் இலக்கியப் பண்ணை 42 நாட்கள் நடைபெற்றது. இந் நாற்பத்திரண்டு நாட்களும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. முதற் பகுதியில் முதியோர்க்கான இலக்கியங்களை எழுதுவதற்கு

வேண்டிய நுட்பங்கள், கொள்கைகள் முதலியவை ஆராயப்பட்டன. இரண்டாம் பகுதியில், இலக்கியங்கள் ஆக்கப்பட்டன. மூன்றாம் பகுதியில் ஆக்கிய இலக்கியங்களை முதியோரிடம் தந்து சோதிப்பதில் இப்பண்ணை ஈடுபட்டது.

இப்பண்ணையில் மூன்றுபடியான இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன. அவை மடல்கள், சுவடிகள், நூல்கள் என்பனவாம். நான்கு பக்க அளவில், ஒரு பக்கத்திற்கு நான்கு வரிகள் கொண்டது மடல். வரி ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு சொற்கள் இருக்கும். ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும் கருத்தினை விளக்கப் படம் உண்டு.

எட்டுப் பக்க அளவில் 400 முதல் 500 சொற்கள் உடையது சுவடி. ஒரு பக்கத்திற்கு ஏறத்தாழ 50 சொற்கள் இருக்கும். சுவடியில் அங்கங்கே கருத்தினை விளக்கும் படங்களும் உண்டு. சுவடிகள் ஒரு தலைப்பிலோ பல தலைப்புக்களிலோ அமையலாம்.

நூலாவது 16 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு பக்கமும், 80 முதல் 100 சொற்கள் வரை உடையது. ஒரு நூலில் 1,300 முதல் 1,600 சொற்கள் இருக்கும். அது குறைந்த அளவு படங்களை உடையது. ஒரு நூல் ஒரு பொருளையோ பல பொருள்களையோ பற்றியதாக இருக்கலாம்.

இவ்விலக்கியப் பண்ணையில் உருவாக்கப்பட்ட மடல்கள் 95 ; சுவடிகள் 45 ; நூல்கள் 25 ; மடல்கள் 24 பாய்ண்ட் எழுத்துக்களாலும், சுவடிகள் 20 அல்லது 18 பாய்ண்ட் எழுத்துக்களாலும், நூல்கள் 16 அல்லது 14 பாய்ண்ட் எழுத்துக்களாலும் அச்சிடப் பெறின், மடல்கள் 4 பக்கங்களிலும், சுவடிகள் 8 பக்கங்களிலும், நூல்கள் 16 பக்கங்களிலும் அமையும்.

சொற்களை அறிமுகப் படுத்தித் தாமாகவே படிக்கும் முயற்சியில் முதியோர்களை ஈடுபடுத்தும் நோக்கத்தை உடையவை மடல்கள். சுவடிகள் படிக்கும் பயிற்சியை வளர்க்கும் ஆற்றல் உடையவை. நூல்கள் படிக்கும் ஆற்றலைப் பெருக்கும் தன்மை வாய்ந்தவை. மூன்றிலும் முதியோரின் கவர்ச்சிக்குரிய கருத்துக்கள் இருக்கவேண்டும். மடல், சுவடி, நூல் ஆகிய மூன்றுபடிகளிலும் கருத்தின் தரமும் செறிவும் படிப்படியே வளர்ந்து கொண்டேபோக வேண்டும்.

இந்த இலக்கியப் பண்ணையில் உருவாகிய இலக்கியங்கள், சில முதியோர் பள்ளிகளில் சோதனை இடப்பட்டன. இச்சோதனையில், பலப்பல உண்மைகள் வெளியாயின. விரிவஞ்சி ஒரு சிலவற்றைக் கூறுகிறேன்.

(1) கதைகளைப் படிப்பதில் முதியோர்களுக்கு ஆர்வம் அதிகம் காணப்பட்டது. கதையும் எளிமையாக இருக்க வேண்டும். நடையும் விறு விறுப்பாய் அமையவேண்டும். ஆனால் கதைப்போக்கு சிக்கலாய் இருக்கக்கூடாது. நிகழ்ச்சிகள் பல இருந்தால், கதையின் அடிப்படைக் கருத்துக்களை மறந்து விடுகிறார்கள்.

(2) அன்றாட வாழ்க்கையில் பயன் படுத்தப்படும் சில பழமொழிகள், சுவை நிறைந்த நிகழ்ச்சிகள் முதலியவற்றில் விருப்பம் கொள்கிறார்கள். அவலச் சுவையை மிகுதியாகக் கொண்ட கதைகளைப் படிக்க அவர்களுக்கு மனமில்லை.

(3) உரையாடலை மிகுந்த சுவையுடன் படிக்கின்றார்கள். அதிலும், மிகுதியான புதிய கருத்துக்களைப் புகுத்தினால், அக் கருத்துக்களைப் புரிந்து கொள்வதில் சற்றுத் தயக்கம் ஏற்படுகிறது.

(4) நாடகங்களைப் படிப்பதில் அவர்கள் இடர்ப்படுகிறார்கள்.

(5) நீண்ட வாக்கியங்களைப் படிக்க முடியவில்லை, இரண்டு முதல் ஏழு, எட்டுச் சொற்கள் அடங்கிய வாக்கியங்கள் அவர்களுக்கு எளிதாக உள்ளன. ஒரே சொல்லைப் பிரித்து, முதற்பாதியினை ஒரு வரியின் கடைசியிலும், பிற்பாதியை அடுத்த வரியின் முதலிலும் வைத்து எழுதுவதும் கூடாது. விகுதிகளையும் அசைகளையும் ஒரு வரிக்கும் அடுத்தவரிக்கும் பிரித்து எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்.

(6) கொச்சைச் சொற்களை அவர்கள் விரும்புவதில்லை. சிறு சிறு சொற்றொடர்களையும் அவர்கள் விரும்புவதில்லை. சிறு சொற்றொடர்களும் பெரிய சொற்றொடர்களும் கலந்து எழுதப்பட்ட நூல்களை அவர்கள் விரும்புகின்றனர். அவர்கள் வழங்கும் சொற்கள் மிகுதியாகப் பயன் படுத்தப்பட வேண்டும். புதிய சொற்களைப் படிப்படியாகப் புகுத்த வேண்டும்.

குடியாட்சியின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது முதியோர் கல்வி. முதியோர் எத்தகைய கல்வி அறிவைப் பெறவேண்டுமென்று திட்டமிட்டு, அதனைத் திணிப்பதைக் காட்டிலும், அவர்கள் எதனை விரும்பி நாடுகிறார்கள் என்றும், அவர்கள் சிறந்த குடிமக்களாக வாழ்வதற்கு எது அவசியம் என்றும் உணர்ந்து, அத் துறைகளில் நூல்களை ஆக்குதல் வேண்டும்.

இங்ஙனம் 42 நாட்கள் முயற்சியின் விளைவாய், இவ்விலக்கியப் பண்ணை ஓரளவு தக்க இலக்கியங்களை உருவாக்கியுள்ளது. இவ் விலக்கியங்கள் முதியோர்க்குப் பெரிதும் பயன்படும் என நம்புகிறேன். நம் தமிழ் நாட்டில் இது போன்ற இலக்கியப் பண்ணைகள் பல தோன்ற வேண்டும். முதியோர்க்குரிய இலக்கியங்கள் இன்னும் சிறந்த முறையில் பெருகவேண்டும்.

“ வெள்ளத்தின் பெருக்கைப் போல் கவிப்பெருக்கும்
கலைப்பெருகும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
ஒளிபெற்றும் பதவி கொள்வார் ” என்ற பாரதியாரின் திருவாக்கினை நாம் நினைவு கூர்வோமாக.

நவ இந்தியாவின் யாத்திரை ஸ்தலங்கள்

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் எல்லாம் எங்கள் இந்தியா என்று நாம் பெருமை கொள்கிறோம். எங்கள் தாய்நாடு, தந்தையர் நாடு என்ற பேச்சினிலே நமக்கு ஒரு சக்தி பிறக்குது; இன்பம் பிறக்குது. ஆனால் வெறும் வாய்வார்த்தைகளால் நம்நாட்டைப் பற்றி வர்ணித்து விட்டால் நமக்கு நம் நாட்டைப் பற்றிய உண்மைகள் தெரிந்துவிடுமா? கங்கை, காவிரி, இமயம், சேது என்றால் போய்ப் பார்த்தவர்களுக்குத்தானே அவைகளின் சிறப்பு நன்றாகத் தெரியும்; அவர்கள்தானே அவைகளை உணர்ச்சி பூர்வமாக அறிந்தவர்களாவார்கள். ஆனால் எல்லாவற்றையும் எல்லாரும் இப்படி நேரில் கண்டு அறிந்துவிட முடியுமா? முடியாது தான். சாத்தியமான மட்டிலும் முக்கியமான விஷயங்களை இப்படி நேரில் தெரிந்து உணர்ச்சி பூர்வமாக அறிவதற்கு எல்லாரும் முயல்வது நல்லது.

நவ இந்தியா உருவாவதை நேரில் கண்டு அதை உணர்ச்சி பூர்வமாக அறிவதற்கு, ஆந்திராவிலுள்ள அனகபள்ளி கிராம விவசாயிகள் முற்பட்டிருக்கிறார்கள். முன்பு நம் மூதாதைகள் புண்ணிய தீர்த்தங்களாட ஸ்தல யாத்திரைகளை மேற்கொண்டார்களல்லவா? அதே பாணியில் இந்த விவசாயிகளும் நவ இந்தியாவின் யாத்திரை ஸ்தலங்களான பக்ரா–நங்கல், தாமோதர்–பள்ளத்தாக்கு அபிவிருத்திப்பிரதேசம், சித்தரஞ்சன் ரயில் எஞ்சின் உற்பத்திசாலை, ஹிமயத்சாகர், பர்மா–ஷெல் எண்ணெய் சுத்திகரிப்பு ஸ்தாபனம், கரும்பு ஆராய்ச்சி நிலையம் முதலிய பொருளாதார அபிவிருத்தி ஸ்தலங்களையும், நாசிக், மதுரா, காசி, ஹரித்துவார் போன்ற புண்ணிய ஸ்தலங்களையும் பார்வையிட்டு வருவதற்குத் திட்டமிட்டுச் சுற்றுப் பிரயாணமும் செய்து வந்திருக்கிறார்கள்.

பக்ரா அணை ஸ்தலம்

அக்டோபர் மத்தியில் குளிரும் பனியும் நடுக்குகையில், 350 ஆந்திர விவசாயிகள் பக்ரா அணை ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களில் அறுபதும் பத்தும் கடந்த



. .. பக்ரா அணை ஸ்தலத்தில், அனகபள்ளி விவசாயிகள். . .

கிழவர்களும், மீசை அரும்பா இளைஞர்களும், கைக் குழந்தைகளை ஏந்திய மாதர்களும், காணும் புதுமைகளை எல்லாம் கண்களால் வாரிவிழுங்கத் துடிக்கும் சிறுவர் களும் ஆகப் பலதிறப்பட்டவர்கள் இருந்தார்கள்.

பிரம்மாண்டமான பாசன—மின்சார அணையாக விளங்கப் போகும் அந்த அணைக்கட்டைப் பார்ப்பதற்கு அவர்கள் காட்டிய ஆசையைத் திருப்திசெய்ய அங்குள்ள எஞ்சினீயர் கள் மனமுவந்து முன்வந்தார்கள். மலைப்பாறையை வெட்டிச் சமப்படுத்தித் தளம் அமைத்திருந்த ஓர் இடத் திற்கு அவர்கள் கோஷ்டி கோஷ்டியாக அழைத்துச் செல்லப்பட்டு, மும்முரமாய் நடைபெறும் அணை வேலையைப் பார்க்கவசதி செய்யப்பட்டது. அவர்கள் இன்னும் உயரமாய் மலையில் ஏறி அணை ஸ்தலக் காட்சியை முழுக்கக் கண்டுகளித்தார்கள். தலை அறுந்து விழுந்து விடுகிறதுபோல் தோன்றும் பாதாளத்தில் அணை அஸ்தி வாரம் இருக்கும் ஸ்தலத்துக்கு அவர்கள் சுரங்கப் பாதை கள் வழியாகச் சென்று பார்த்தார்கள். இந்த மகத்தான அணையைக் கட்டுவதற்காகத் தொழிலாளிகள் செங்குத் தான பாறைமுகங்களை வெட்டிச் செதுக்கும் பொருட்டு உச் சாணி உயரத்தில் தொற்றிக்கொண்டு வேலை செய்வதை அவர்கள் கண்டார்கள். இவ்வாறு வேலைசெய்யும் சுமார் 8,000 தொழிலாளருக்கும் அங்கே செய்து கொடுக்கப் பட்டுள்ள வசதிகளை அவர்கள் பார்த்துப் பாராட்டினார்கள். குடிதண்ணீர் வசதிக்காக அங்கங்கே நவீன ரீதியில் தொட்டி கள் வைக்கப்பட்டிருப்பதையும், ரசாயன ரீதியில் சுத்தம் செய்யப்படுகிற சுகாதார மான கக்கூசுகள் அமைக்கப்பட் டிருப்பதையும், இவ்வளவு ஜனநெருக்கடியுள்ள இடத்தில் ஈக்களே இல்லாமல் இடம் சுத்தமாக இருப்பதையும் பார்த்து அவர்கள் வியந்தார்கள்,

நங்கல் ஊருக்கு விஜயம்

மாலையில் அவர்கள் நங்கல் [ஜல மின்சார வாய்க்கால் மதகுத் தலைப்பில் அழகாக மின்சார வெளிச்சம் போடப் பட்டுள்ள இடத்தில் இளைப்பாறி நங்கல் ஊர்வாசிகளுடன் உறவாடி மகிழ்ந்தார்கள். தேக்கத்திலுள்ள தண்ணீரை வரண்டு கிடக்கும் நதிகளுக்குக்கொண்டு சேர்ப்பதற்காகக் கால்வாய் வழியாகப் பாய்ந்தோடும் தண்ணீரையும், மின்சார உற்பத்திக்குத் தண்ணீர் பாயும் கால்வாயையும் பார்த்தார்கள். ஆந்திராவிலும் 221 கோடி ரூபாய் செல வில் நாகார்ஜுன சாகர் கட்டப்படப்போவதை அவர்கள் நினைத்துப் பார்த்து அதன் எதிர்காலத் தோற்றத்தை மன தில் ஓரளவு உருவகித்து மகிழ்ந்தார்கள்.

ஆந்திரா விவசாயிகளின் இந்தப் பிரயாணத் திட்டம் 50 நாள் யாத்திரை உள்ள திட்டம். மொத்தம் சுமார் 5,000 மைல் தூரம் அவர்களின் பிரயாணம் நீடித்தது. தேசத் தின் பிரதான பாசன மின்சாரத் திட்டங்களும், தேசியத் தொழில் ஸ்தலங்களும், சரித்திர முக்கியத்துவ நகரங் களும், புண்ணிய க்ஷேத்திரங்களும் பிரயாண ஸ்தலங்க ளாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தன.

ஹைதராபாத்தில் அவர்கள் ஹிமயத்சாகர், காந்திபேட்டா ராஜேந்திர சாகர் பண்ணை, உஸ்மானியா சர்வகலாசாலை, கோல்கொண்டா கோட்டை, ஸாலர்ஜங் பொருட்காட்சி சாலை முதலியவைகளைப் பார்வையிட்டார்கள்.

பம்பாய்க்கு வந்தவுடன் 70,000 ஏக்கரா விஸ்தீர்ண முள்ள ஆரே பால் பண்ணைக்கு விஜயம் செய்து, பம்பாய் மக்களுக்கு 70,000 பவுண்ட் பால் சப்ளை செய்யும் திட்டத் தைப் பார்வையிட்டார்கள்; பாலை ருசிபார்த்தார்கள். அங்கே கால் நடைகளை வெகு பத்திரமாகவும், வசதியாக வும் பராமரித்து வருவதைக் கண்டார்கள், " சில இடங்க ளில் மனிதர்களுக்குக்கூட இவ்வளவு வசதிகள் இல்லையே " என்றுதான் அவர்கள் நினைக்கவேண்டியதாக இருந்தது.

கிராம மக்களுக்கு மண்ணெண்ணெய் " ராந்தல் " தானே முக்கியம். அந்த மண்ணெண்ணெய் எப்படி சுத்தி கரிக்கப் படுகிறது என்பதை பர்மா-ஷெல் சுத்திகரிப்புச் சாலையில் அவர்கள் பார்த்தார்கள். அது அறிவுக்கு விருந்தாகவே இருந்தது.

இந்தியா கலைத்திறன் படைத்த நாடல்லவா ? இந்திய மக்களுக்குக் கலை சிருஷ்டிகளைப் பார்ப்பதில் ஆர்வம் கொஞ்சமாகவா இருக்கும் ? எனவே அவர்கள் ஆக்ராவில் இரண்டு நாள் தங்கியிருந்து தாஜ் மஹாலின் அழகை மீண்டும் மீண்டும் பருகிவந்தார்கள்.

பிரதம மந்திரி சந்திப்பு

டில்லிக்கு வந்தபின் அந்த விவசாயிகளின் நீண்ட நாள் ஆசைகள் இரண்டு நிறைவேறிவிட்டன. தேச பிதாவுக்கு ராஜகாட்டில் அஞ்சலிசெய்யும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்தது. பிரதம மந்திரியை அவர் வீட்டிலேயே பேட்டி காணும் வாய்ப்பும் கிடைத்தது. அவர்கள் திருப்திக்குக் கேட்கவா வேண்டும் ?

லக்னோ நகரில் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தைப் பார்த்த தில் அவர்களுக்கு அதிக சந்தோஷம் ஏற்பட்டது. அயோத் திக்கு வந்ததும் தசரத ராமர்களைப் பார்க்க முடியாவிட்டா லும், தங்களைப் போன்ற சாதாரண விவசாயிகளைச் சந்தித் துப் பேசி மகிழ அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் பரஸ்பரம் தங்கள் தங்கள் விவசாய முறைகளைப் பற்றி விவரம் தெரிவித்துக் கொண்டார்கள். கிராமியப் பாடல்களைப் பாடியும், கிராமிய நடனங்களை ஆடியும் பரஸ் பரம் சந்தோஷமடைந்தார்கள்.

புனிதமான காசியில் தீர்த்தயாத்திரையும், க்ஷேத்திராட னமும் நடத்தியதுடன், காசி சர்வ கலாசாலைக்கும் விஜயம் செய்தார்கள். சிந்திரிக்குச் சென்று அவர்கள் இந்தியா வில் பிரதான ரசாயன உர உற்பத்திச் சாலையைப் பார்வை யிட்டார்கள். சித்தரஞ்சன் எஞ்சின் உற்பத்திச்சாலை, டாட்டா இரும்பு-உருக்குத் தொழிற்சாலை, தாமோதர் பள்ளத் தாக்குத் திட்டம், ஹிராகுட் திட்டம் முதலியவைகளை எல்லாம் பார்வையிட்டபின், பூரி ஜகன்னாத் சேவை செய்து விட்டு நவம்பர் 10உ மீண்டும் அனகபள்ளி கிராமத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.

கோலாகல வரவேற்பு

அனகபள்ளியில் அவர்களை ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கோலாகலமாக வரவேற்று, ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஊர்வலக் கூட்டம் ஒரு மைல் நீளமிருந்தது. அந்த ஊரில் அதற்கு முன் அத்தகைய ஒரு வைபவம் நடந்ததே இல்லை என்று கூறலாம்.

மீண்டும் இப்போது அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தொழிலில் ஈடுபட்டுவிட்டார்கள். ஆனால், அவர்களின் விஷய அறிவு விரிவடைந்திருக்கிறது; புதிய புதிய காரியங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்; அவை அவர்களின் வாழ்க்கைக்கும், அவர்களின் பின் சந்ததிகளின் வாழ்க்கைக்கும் பயன்படும்; அத்துடன், அவர்களின் மனப்பான்மையும் விசாலமாகிவிட்டிருக்கிறது; இன்றைய இந்தியாவைப் பற்றி நிதர்சனமாக அவர்கள் அறிந்திருக்கிறார்கள்; அதில் தங்களுக்குரிய ஸ்தானத்தையும் அவர்கள் நன்கு உணர்ந்துவிட்டார்கள்.

அவர்கள் மற்றவர்களிடமிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொண்டது போலவே, மற்றவர்களுக்குப் பல விஷயங்களைத் தெரிவித்துமிருக்கிறார்கள். நெல், கரும்பு சாகுபடி முறைகள் சம்பந்தமாய் அவர்கள் பல அரிய நுட்பங்களை மற்றவர்களுக்குத் தெரிவித்து வந்திருக்கிறார்கள்.

ஐ. நா. ஸ்தாபன மதிப்பீட்டு அறிக்கை

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சமுதாய அபிவிருத்தித் திட்டங்களைப் பரிசீலித்துள்ள ஐ. நா. ஸ்தாபனத்தின் பிரசுரம் ஒன்று அத் திட்டத்தை "சமீப காலத்தில் சமுதாய நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களில் எல்லாம் மிகவும் விஸ்தாரமான தேசிய திட்டம்" என்று வர்ணித்திருக்கிறது. "சமுதாய அபிவிருத்திக் கோட்பாடுகள்: ஸ்தல முயற்சி மூலம் சமூக முற்போக்கு" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அப் பிரசுரம் உலகத்தின் பல நாடுகளிலும் நடத்தப்பட்டுள்ள சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்ந்திருக்கிறது. பல தேச அனுபவ அடிப்படையில் உருவான பல யோசனைகளையும் கருத்துக்களையும் அது தெரிவித்திருக்கிறது.

இந்தியாவின் சமுதாய அபிவிருத்தித் திட்டம் காந்தீய தத்துவத்தையும் வாழ்க்கை முறையையுமே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கிறது என்றும், தேசத்துக்கு சுதந்தரம் கிடைத்தபின் தேசிய வாழ்க்கையும் சர்க்கார் நடவடிக்கைகளும் புத்துயிர் பெற்று அதிதீவிரமாக நடைபெற்று வருகின்றன என்றும், இந்தியத் தலைவர்கள் துரித உணர்ச்சியுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துவருகிறார்கள் என்றும் மக்களிடையே அவ் வுணர்ச்சிகள் வேரூன்றுவதற்கு வழிசெய்கிறார்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

க்ஷேமநல நிர்வாகம்

சமுதாய அபிவிருத்தித் திட்ட நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், முன்பு ரெவினியூ வசூலுக்காகவும், சட்ட-ஒழுங்கு பரிபாலனைத்துக்காகவும் ஏற்பட்டிருந்த சர்க்கார் நிர்வாகக் கட்டுக்கோப்பையே, க்ஷேமநல அபிவிருத்தி ஏற்பாட்டை நடத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கப்படுகிறது; அதற்கெனத் தனியாக ஸ்தாபனம் நிறுவப்படவில்லை; சர்க்காரின் சகல அபிவிருத்தி இலாகாக்களின் ஆதார வசதிகளும் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. அதனால் ஆரம்பத்தில் மக்கள் மனதில் ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டது. அபிவிருத்திக் கமிஷனர்தான் எல்லாம் செய்யவேண்டுமென்று அவர்கள் கருதிவிட்டார்கள். பற்பல சர்க்கார் இலாகாக்களும் அதில் ஈடுபடுகின்றன; கமிஷனர் இணைப்பு அதிகாரியாகவே பணியாற்றுகிறார். இந்த அம்சத்தை அடிக்கடி வற்புறுத்திய பின்தான் அதைப் பலரும் புரிந்துகொள்ள முடிந்தது என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சமுதாய அபிவிருத்தித் திட்ட சேவை பயிற்சி

சமுதாய அபிவிருத்தித் திட்டத்துக்கு வேண்டிய ஊழியர்களைப் பயில்விப்பதற்கு அதன் நிர்வாக ஸ்தாபனம் ஏற்பாடு செய்திருப்பதை அப் பிரசுரம் குறிப்பிட்டிருக்கிறது. திட்ட ஊழியர்களில் பலரை சர்க்கார் நிர்வாகத்திலிருந்து பெற முடிந்தாலும், பல காரிய சேவையாளரைத் திரட்டுவதற்கு விசேஷ பயிற்சி அளித்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது என்பதை அது குறிப்பிட்டிருக்கிறது. சர்க்கார் ஊழியர்களும் புதிய சேவைக்கு ஏற்றமுறையில் மனமாறுதல் கொள்ளும்படி செய்வது அவசியமாயிருந்தது. திட்ட அதிகாரிகள், சேவையாளர் ஆகியோரின் பயிற்சிக்காக ஆராய்ச்சி மகாநாடுகள் நடத்தப்பட்டிருப்பதையும் அறிக்கை விசேஷமாகக் குறிப்பிட்டிருக்கிறது.

நிதி அமைப்பு

சமுதாய அபிவிருத்தித் திட்டத்துக்கான செலவுப் பொறுப்பு பிரம்மாண்டமானது என்றும், அதன் பெரும் பகுதிச்சுமை மத்திய சர்க்காரையே சார்ந்துவிட்டிருக்கிறது என்றும் ஐ. நா. ஸ்தாபனப் பிரசுரம் குறிப்பிடுகிறது. 1953–56 கால அளவுக்கு மொத்தம் 156·2 கோடி ரூபாய் செலவாகும்; அதில் 107·2 கோடி ரூபாய் மத்திய சர்க்காரின் பங்காக இருக்கிறது. மீதியை ராஜ்ய சர்க்கார்கள் தருகிறார்கள். தனித்தனி இலாகாக்களின் செலவுகளிலும் ஒரு பகுதி இதற்குப் பயன்படுகிறது. அந்தந்தப் பிரதேச மக்களின் நன்கொடைகளும் இதற்கு உதவுகின்றன.

யாருடைய இயக்கம் ?



1. அரசாங்க அதிகாரிகள், தாங்கள் உத்தரவுகள் பிறப்பிப்பதால், சமுதாய நலத்திட்ட இயக்கம் தங்களுடையதுதான் என்றெண்ணுகிறார்கள்.

2. வெளிநாட்டார், அந்த இயக்கம் தங்களுடையதுதானென்று கருதுகிறார்கள். ஏனெனில், அவர்கள், அபிவிருத்தி வேலைகள் தங்கள் விஜயத்தையொட்டி, நடைபெறுகிறதாக எண்ணுகிறார்கள்.

3. அரசியல்வாதிகள், அது தங்களுடைய இயக்கமென்று உரிமை கொண்டாடுகிறார்கள். ஏனெனில், அவர்கள் அத்திட்டத்துக்கு எதிராக, மேடைப்பிரசங்கம் செய்வதில்லை.

4. முதலாளிகள், அந்த இயக்கம் தங்களுடையதென்று கூறுகிறார்கள். ஏனெனில், அத்திட்டம் நிறைவேறும்போது, உழைப்புக்கு ஊதிய மளிக்கப்படுவதில்லை.

5. மற்றும், அநேக சங்கங்களைச் சார்ந்த அங்கத்தினர்களும் பிரமுகர்களும் தலைவர்களும் அது தங்களுடைய இயக்கம் தானென்று உரிமை கொண்டாடுகிறார்கள்.

6. ஆனால் உழைக்கும் கிராம மக்களோ “இவர்கள் எல்லாம் இப்படி உரிமை கொண்டாடும் போது, நாங்கள் இந்த இயக்கத்தை எங்களுடையது என்று கூறமுடியுமா!” என்று புன்சிரிப்புடன் கூறுகிறார்கள்.

பம்பாய் ராஜ்ய விவசாயிகள் சென்னை விஜயம்

[ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் அநேக அபிவிருத்தித்திட்டப் பிரதேசங்கள், யாத்திரை ஸ்தலங்கள் ஆகிவிட்டன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் கிராம மக்கள் ஒன்று சேர்ந்து, நாடு முழுவதிலும் சிதறிக்கிடக்கும் இந்த முக்கிய இடங்களைக் காண, திரள் திரளாகப் புறப்பட்டு வருகிறார்கள். இது பற்றிய குறிப்புகள் கீழே தரப்படுகின்றன.

நம் ராஜ்யத்தில் உள்ள கிராமப் பெருமக்கள் இது போன்ற 'அபிவிருத்தி யாத்திரை' ஒன்றை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவது மிகவும் சிறந்த பலனளிக்கும். முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவ்வாறு செய்யுமாறு வற்புறுத்தியுள்ளார். சென்னை ராஜ்ய விவசாய மன்றத்தைச் சார்ந்த நிர்வாகிகள், இது விஷயமாக தீவிர முயற்சி மேற்கொள்வது நலம். எல்லா அபிவிருத்தி அதிகாரிகளும், வட்டார அபிவிருத்தி ஆலோசனைக்கமிட்டி அங்கத்தினர்களும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

—ஆசிரியர்]

பம்பாய் ராஜ்யத்திலுள்ள நாடியாட் சமுதாய அபிவிருத்தி வட்டாரத்திலிருந்து 536 பேர்களடங்கிய கோஷ்டி ஒன்று, இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து, அங்கங்கு நடைபெற்றுவரும் பல்வேறு அபிவிருத்தித் திட்ட வேலைகளைப் பார்த்துவந்தது. இக்கோஷ்டியினர், 1955 டிசம்பர் 16-ந் தேதியன்று நாடியாடிலிருந்து புறப்பட்டு, மதுரா, டில்லி, லக்ஷ்மணபுரி, பக்ரா, சண்டிகார், புவனேஷ்வர், சிந்திரி தொழிற்சாலை, தாமோதர் நதிப்பள்ளத்தாக்குத் திட்டம், ஜாரியா கரிச்சுரங்கங்கள், ஹீராகுட் அணை, சித்தரஞ்சன் தொழிற்சாலை, ஜாம்ஷெட்பூர், ஜகந்நாதபுரி, விசாகப்பட்டணம் கப்பல் கட்டும் தொழிற்சாலை, முதலியவற்றிற்கு விஜயம் செய்துவிட்டு, 1956-ம் ஆண்டு ஜனவரி மீ 7-ந் தேதியன்று சென்னை வந்து சேர்ந்தனர்; அன்றே, பெரம்பூர் ரயில் பெட்டி உற்பத்தி சாலையை, அக்கோஷ்டியினர் பார்த்தனர். சென்னை அரசாங்க முதல் அமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ், அடிஷனல் சமுதாய அபிவிருத்தி கமிஷனர், ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி, ஐ.சி.எஸ்., செய்தி இலாகா டெபுடி டைரக்டர் ஸ்ரீ கா. திரவியம் முதலானோர் சென்னை கடற்கரை ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து அக்கோஷ்டியினரை வழியனுப்பினார்கள். அப்போது, நமது முதல் அமைச்சர், அபிவிருத்தி வேலைகளைப்பற்றி நேரில் பார்த்தறிய விவசாயிகளே பல ஸ்தலங்களுக்கு விஜயம் செய்வதைத் தாம் பாராட்டுவதாகக் கூறினார். மேலும் அவர், தென்னிந்திய விவசாயிகளும், இம்மாதிரி சுற்றுப்பிரயாணம் செய்து, அபிவிருத்தி வேலைகளை நேரில் பார்த்தறியவேண்டுமென்று தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்.

இக்கோஷ்டியினர், புயல் நிவாரணத்துக்காக, 402 ரூபாயை, முதல் அமைச்சரிடம் அளித்தனர். சென்னையை விட்டுப் புறப்பட்டு அக்கோஷ்டியினர் புதுச்சேரி, தனுஷ்கோடி, ராமேஸ்வரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம் முதலிய ஊர்களுக்குச் சென்றுதிரும்பி, 1956-ம் ஆண்டு ஜனவரி மீ 12-ந் தேதி, தங்கள் ராஜ்யம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

பம்பாய் ராஜ்யத்தைச் சேர்ந்த 'ப்ரோச்' பிரதேசத்திலிருந்து, சுமார் 400 விவசாயிகள் அடங்கிய கோஷ்டி ஒன்று, ஜனவரி மாதம் அகில இந்திய சுற்றுப்பிரயாணம் செய்து, எல்லா முக்கிய அபிவிருத்தித் திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

ஆப்கன் அதிகாரிகளின் ஆராய்ச்சி

ஆப்கானிஸ்தானில் சமுதாய அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள நான்கு உயர்தர அரசாங்க அதிகாரிகள், 1956, ஜனவரியில், ஐ.நா. தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ், நம் ராஜ்யத்திலே சுற்றுப்பிரயாணம் செய்தனர். அவர்கள், 1956, ஜனவரி 2-ந் தேதியன்று மதுரை ஜில்லாவிலுள்ள காந்தி கிராமத்துக்கு விஜயம் செய்தனர். ஆப்கன் ஆரம்பக் கல்வி இலாகாத் தலைவர் ஸ்ரீ மெய்ல் முகம்மத் அவீப், அக் கோஷ்டியின் தலைவராவார்.

காந்தி கிராமத்தில் அவர்கள் இரண்டு நாட்கள் தங்கியிருந்து, சமுதாய அபிவிருத்தி வேலைகளை மக்கள் புரிவதை, சுற்றுப்புறங்களிலுள்ள 10 கிராமங்களுக்குச் சென்று நேரில் பார்த்தனர். காந்தி கிராமத்தில் பயிற்சி ஸ்தாபனங்கள் எவ்வாறு நடக்கின்றனவென்பதையும் அவர்கள் நேரில் கண்டு அறிந்துகொண்டார்கள். 1956, ஜனவரி 4-ந் தேதியன்று, அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்து, அடிஷனல் சமுதாய அபிவிருத்தி கமிஷனர் ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி அவர்களுடன், கிராம நலத் திட்டங்கள்பற்றி விவாதித்தனர். அன்றைய தினம் அவர்கள் சென்னையை விட்டு, பம்பாய்க்குப் புறப்பட்டுச் செல்லும்போது, சென்னை ராஜ்யத்தில், கிராம நலத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு மக்கள் அளிக்கும் ஒத்துழைப்பை மிகவும் பாராட்டுவதாகக் கூறினார்கள்.

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Director of Community Development, Government of Madras.